# கனகத்தூதன்

Canadian Tamil Catholic Messenger

**CanaCaThuthan**

Issue 74 | August 15, 2026 | இதழ் 74

Publication Mail
Agreement No: 41416031


Return Undeliverable
Canadian Addresses to:
The Canadian Tamil
-Catholic Messenger
708 Aspen Road
Pickering, ON L1V 3Z1


மிடலன்ட்
திருயாத்திரைச் சிறப்பிதழ்
Special Issue on
Midland Pilgrimage

## "உலகம் வாழ்வைப் பெறுவதற்காக" என்ற குறிக்கோளுடன்



திருத்தந்தை பதினான்காம் லியோ பிரான்சிற்கு மேற்கொள்ளும் முதல் அதிகாரப்பூர்வ அரசுமுறைத் திருத்தூதுப் பயணம்




மருதமடு அன்னையின் பெருவிழா ஆகஸ்ட் 15, 2026 சனிக்கிழமை தூய ஆரோக்கிய அன்னைப்பங்கில் நடைபெறும்



மறைசாட்சியர்களின் திருத்தலம் — நம்பிக்கையும் யாத்திரையும் நிறைந்த 100 ஆண்டுகள் — 39-வது ஆண்டு தமிழர் திருநாள் 2026




**தூய ஆரோக்கிய அன்னை பங்கு நடாத்திய கோடைகால ஒன்றுகூடல் -2026**




**செம்மணிக்கு நீதி கோரி யாழில் போராட்டம்**

# 2027 மரியாவின் திருத்தலங்களுக்கும் உரோம், வத்திக்கான் பேராலயங்களுக்கும் தூய அந்தோனியார் திருத்தலத்துக்குமான திருப்பயணம்

## Pilgrimage to the Marian Shrines, Rome and Vatican Cathedrals, and St. Anthony's Shrine - Year 2027

**May 10, 2027 (14 days)**



For more Details please call Philip Anantham Antony at 647 280 8984 or email: antonymaha@gmail.com



### மரியாவின் திருத்தலங்களுக்கான திருப்பயணத்தின் விபரங்கள்

நாள் 1 - 3
- ரோரன்ரோவிலிருந்து ஆரம்பமாகி இத்தாலியை அடைதல்
- ✦ உரோமையில் திருத்தந்தையுடன் செபவழிபாட்டில் பங்கு பெறவும் மிக அருகில் அவரைப்பார்கவும் வாய்ப்புண்டு
- ✦ தூய பேதுரு பேராலயம்
- ✦ திருத்தந்தையர்களின் கல்லறை
- ✦ ரோமையில் உள்ள 5 அழகான பேராலயங்களையும் தரிசிக்கவும்
- ✦ இலட்ச்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் 1 ஆம் 2 ஆம் நூற்றாண்டுகளில் மறைசாட்சிகளாக மரணித்து பல ஏக்கர் பரப்புகளில் நிலத்தடியில் புதைக்கப்பட்ட (Catacombs) தூய இடங்களை தரிசித்தல்

நாள் 4
- பதுவை நோக்கிப்பயணம் தூய அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி

நாள் 5
- மரியா வாழ்ந்த வானதூதர்களால் காவிச்செல்லப்பட்ட வீடு வைக்கப்பட்டிருக்கும் லொறேற்றாஆலயத்தை தரிசித்தல்
- அங்கோணாவை அடைதல்

நாள் 6 - 8
- மெற்றக்கொரியை அடைதல்
- ✦ இன்றைய நாட்களிலும் மரியன்னை தோன்றி காட்சிதரும் ஆறு காட்சியாளர்களை பார்க்கவும் அவர்கள் உரையைக் கேட்கவும் வாய்ப்புண்டு

நாள் 9 - 10
- பிரான்ஸ் லூர்து திருத்தலம் நோக்கி விமானத்தில் பயணம்
- ✦ திருப்பலி
- ✦ சிலுவைப்பாதை
- ✦ இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரம்
- ✦ தூய பேர்னடேற் வாழ்ந்த இடங்களை தரிசித்தல்
- ✦ புதிதாக லூர்து திருத்தலத்தை பற்றி வெளியிட்ட திரைப்படம்
- ✦ அரும்பொருள் காட்சிச்சாலை பார்வையிடல்

நாள் 11 - 13
- போத்துக்கல் பத்திமா அன்னையின் திருத்தலம் நோக்கி பயணம்
- ✦ திருப்பலி
- ✦ சிலுவைப்பாதை
- ✦ இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரம்
- ✦ அன்னை காட்சி கொடுத்த இடங்களை தரிசித்தல்
- ✦ காட்சி பெற்றவர்களான தூய யசிந்தா, லூசியா, பிரான்சிஸ்கோ கல்லறைகளை தரிசித்தல்
- ✦ இத்திருத்தலத்திற்கு திருத்தந்தையர்கள் அரசபரம்பரையினர் வழங்கிய விலைமதிப்பான பொருட்களை கொண்ட அருங்காட்சியகம் பார்வையிடல்
- ✦ பத்திமா அன்னை காட்சி கொடுத்த வரலாற்று திரைப்படம்

நாள் 14
- போத்துக்கல் லிஸ்பனில் இருந்து ரோரன்ரோவை வந்து அடைதல்



### Pilgrimage to the Marian Shrines Travel Details

Day 1 - 3
- Departure from Toronto Pearson Airport to Rome (Italy).
- ✦ Special Audience with Pope and prayer service
- ✦ Saint Peter's Cathedral,
- ✦ Tomb of the Popes
- ✦ Visit all 5 beautiful cathedrals in Rome
- ✦ Visit the catacombs where hundreds of thousands of Christians died as martyrs in the 1st and 2nd centuries and were buried underground over acres of land.

Day 4
- Visit Padua Shrine of Saint Anthony
- ✦ Holy Mass


Day 5
- Visiting the Church of Loreto. For many centuries, tradition held that angels miraculously carried the Holy House (where Mary lived) from Nazareth to Loreto in 1294.
- ✦ Reaching Ancona

Day 6 - 8
- Reaching Medjugorje
- ✦ Visiting Blue Mountain and White Cross
- ✦ Possibility of meeting the visionaries who receive messages from our lady continuously

Day 9 - 10
- Air travel to Lourdes, France
- ✦ Holy Mass
- ✦ Stations of the Cross
- ✦ Bath in the lourdes water
- ✦ Candlelight procession at night
- ✦ Visit Bernadette's house
- ✦ Movie about Lourdes
- ✦ Visiting the Art Gallery

Day 11 - 13
- Traveling for Fatima
- ✦ Holy Mass
- ✦ Stations of the Cross
- ✦ Candlelight procession at night
- ✦ Visiting the places where our lady of Fatima gave the vision
- ✦ Visiting the tombs of Saints Yacinda, Lucia, Francisco who received visions
- ✦ Visiting the famous museum

Day 14
- Departure from Lisbon Air port to Toronto



### முற்பதிவுச் சிறப்பு விலை!

திருப்பயண நாட்கள் ஒரு சிறப்பான ஆன்மீக பயணத்தின் சிறப்பான அனுபவம். இறைவனோடு, மரியாவின்அன்பிலும் அவரின் பரிவிலும் வாழும் இந்நாட்களை வாழ்வில் ஒருபோதும் மறக்க மாட்டீர்கள். அனைத்து வசதிகளும் உங்கள் எதிர் பார்ப்புக்கு மேலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விமானநிலைய வரிகள், செல்லும் நாடுகளுக்கான பயண ஒழுங்குகள், தங்கும் விடுதி, காலை மாலை உணவுகள், காட்சியக அனுமதி அனைத்தும் 14 நாட்களுக்கும் CAN $5,400 மட்டுமே.

பெப்ரவரி 1 ஆம் திகதிக்கு முன் $3,000 டொலர்களும் ஏப்ரல் 15 க்கு முன் $2400 டொலர்களும் செலுத்தவேண்டும். மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் பிலிப் ஆனந்தம் அன்ரனி 647 280 8984 or email: antonymaha@gmail.com

### EARLY BIRD SPECIAL!

Package includes air travel, all local transportation, 4-star hotel accommodation with double occupancy, daily breakfast and dinner, and all entry fees. There will be guided tours with explanations available in both English and Tamil. Please note that lunch and medical insurance are not included. The total price is $5,400 ($3,000 paid before February 1st, 2027 and $2,400 paid before April 15th, 2027). Please call Philip Anantham Antony at 647 280 8984 or email: antonymaha@gmail.com



பதிவு செய்ய அழையுங்கள் பிலிப் ஆனந்தம் அன்ரனி

**Tel: 416 300 7026 or E mail: anton.philip@gmail.com**

# உலகம் வாழ்வைப் பெறுவதற்காக என்ற குறிக்கோளுடன் திருத்தந்தை பதினான்காம் லியோ பிரான்சிற்கு மேற்கொள்ளும் முதல் அதிகாரப்பூர்வ அரசுமுறை திருத்தூதுப் பயணத்திட்ட வெளியீடு!



திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் செப்டம்பர் 25 முதல் 28 வரை பிரான்சிற்கு மேற்கொள்ளவுள்ள திருத்தூதுப் பயணத்தின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது. திருத்தந்தையின் நான்கு நாள்கள் மேற்கொள்ளவிருக்கும் இப்பயணத்தில் பாரிஸ், செயின்ட்-டெனிஸ், லூர்து மற்றும் மெட்ஸ் ஆகிய நகரங்களுக்கு பயணம் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2024 டிசம்பரில் கோர்சிகா தீவின் அஜாச்சியோ நகருக்கும், 2023 செப்டம்பரில் மார்செய் நகருக்கும், 2014ஆம் ஆண்டு ஸ்ட்ராஸ்பூர்க் நகருக்கும் சென்றிருந்தாலும், அவை எதுவும் அதிகாரப்பூர்வ அரசுமுறைப் பயணங்களாக அமையவில்லை. எனவே, திருத்தந்தை அவர்களின் இப்பயணம், 2008 செப்டம்பரில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் மேற்கொண்ட பயணத்திற்குப் பின்னர், பிரான்சிற்கு மேற்கொள்ளப்படும் முதல் அதிகாரப்பூர்வ அரசுமுறைத் திருத்தூதுப் பயணமாக அமைகிறது.



*2024ஆம் ஆண்டு கோர்சிகாவில் திருத்தந்தை பிரான்சிஸுடன் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன் சந்திப்பு*

### செப்டம்பர் 25 — உரோமிலிருந்து பாரிஸ்

செப்டம்பர் 25 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாரிஸ் ஓர்லி பன்னாட்டு விமான நிலையத்தைச் சென்றடைந்து, வரவேற்பு நிகழ்வுக்குப் பின்னர், பிரான்ஸ் குடியரசுத் தலைவர் இமானுவேல் மக்ரோன் அவர்களை எலிசே மாளிகையில் திருத்தந்தை சந்திப்பார். தொடர்ந்து, அரசு அதிகாரிகள், குடிமைச் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் தூதரகப் பிரதிநிதிகள் முன்னிலையில் திருத்தந்தை உரையாற்றுவார்.




அன்று பிற்பகலில், ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் தலைமையகத்திற்குச் சென்று உரையாற்றவுள்ளார். பின்னர், பாரிஸ் கத்தோலிக்க நிறுவனத்தில் நடைபெறும் மாகாண அளவிலான ஆயர் மன்றக் கூட்டத்தில் பங்கேற்பார், மறைக்கல்வி பயில்வோர் மற்றும் புதிதாக திருமுழுக்குப் பெற்றோர் ஆகியோரைச் சந்திப்பார்.

பாரிஸில் தனது முதல் நாள் நிகழ்வுகளை நிறைவு செய்யும் வகையில், அங்குள்ள பிளாஸ் த லா கொன்கோர்டு எனப்படும் புகழ்பெற்ற சதுக்கத்தில் திருப்பலி நிறைவேற்றும் திருத்தந்தை, பின்னர் விமானம் மூலம் லூர்து நகருக்குச் செல்வார்.

### செப்டம்பர் 27 — லூர்து

லூர்துவில் தனது முதல் முழுநாள் நிகழ்வுகளை செப்டம்பர் 27 அன்று தொடங்கும் திருத்தந்தை, லூர்து அன்னை திருத்தலத்தின் புனித பெர்னதெத் அரங்கில் பிரான்ஸ் ஆயர் பேரவையின் உறுப்பினர்களைச் சந்திப்பார். இதனைத் தொடர்ந்து, திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றுவார்.

பின்னர், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து திருப்பயணிகளாக லூர்துக்கு வருபவர்களுக்கு தங்குமிடமும் மருத்துவ மற்றும் பராமரிப்பு வசதிகளும் வழங்கும் 'Accueil Notre Dame' மையத்தின் பணியாளர்களையும், அங்கு தங்கியிருக்கும் நோயாளிகளையும் திருத்தந்தை சந்தித்து வாழ்த்துவார். அதன்பிறகு, லூர்து கார்மேல் துறவுமடத்தில் தியான வாழ்வில் ஈடுபடும் அருள்சகோதரிகளைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பார். அன்றைய நாளின் இறுதியில், லூர்து திருத்தலத்தில் நடைபெறும் பாரம்பரிய ஒளிபவனியில் பங்கேற்று செபமாலையை திருத்தந்தை வழிநடத்துவார்.



லூர்து அன்னை மரியா திருத்தலத்தில் தினமும் நடைபெறும் தீப்பந்த ஊர்வலம்

### செப்டம்பர் 28 — லூர்து, மெட்ஸ், உரோம்

பிரான்சில் திருத்தந்தையின் இறுதி நாளான செப்டம்பர் 28 அன்று, மெட்ஸ் நகருக்குச் செல்லும் அவர், அங்கு சமயங்களுக்கு இடையிலான சந்திப்பிலும், அமைதி மற்றும் ஒற்றுமைக்காக ஐரோப்பாவின் வேர்களுக்குத் திரும்புதல் என்ற தலைப்பிலான சந்திப்பிலும் பங்கேற்பார். இந்நிகழ்வு 'ராபர்ட் ஷூமான்' மாநாட்டு மையத்தில் நடைபெறும். பின்னர், மெட்ஸ் நகரின் புனித ஸ்தேவான் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி பிரான்சில் தனது திருத்தூதுப் பயணத்தை நிறைவு செய்வார். இறைவனின் விளக்கு என அழைக்கப்படும் இந்தப் புதிய கோத்திக் கட்டடக்கலைப் பேராலயம், 6,500 சதுர மீட்டருக்கும் அதிகமான வண்ணக் கண்ணாடி ஜன்னல்களைக் கொண்டிருப்பதால் புகழ்பெற்றதாகும். மாலை 7 மணிக்கு மெட்ஸ்-நான்சி-லொரேன் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் புறப்படும் திருத்தந்தை, பின்னர் உரோம் திரும்புவார்.

பயணத்தின் இலச்சினையும் குறிக்கோளும்

திருத்தந்தையின் பிரான்ஸ் பயணத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இலச்சினையில், பிரான்சின் கோத்திக் பேராலயங்களின் ரோஜா வடிவ வண்ணக் கண்ணாடி ஜன்னல்களை நினைவூட்டும் வடிவமைப்பு இடம்பெற்றுள்ளது. இது, திருஅவையில் நிலவும் ஒன்றிப்பு மற்றும் ஒற்றுமையின் அழகைக் குறிக்கிறது.

இலச்சினையின் மையத்தில் இடம்பெற்றுள்ள கூர்மையான கோத்திக் வளைவும் சிலுவையும், இப்பயணத்தின் திருத்தூது மற்றும் வழிபாட்டு பரிமாணத்தை வெளிப்படுத்துகின்றன.

தூய ஆவியாரைக் குறிக்கும் புறா, மனிதகுலத்திற்கான அமைதியின் அடையாளமான ஒலிவக் கிளையைத் தனது அலகில் ஏந்தியுள்ளது. நீலம், வெள்ளை, சிவப்பு ஆகிய பிரான்சின் தேசிய நிறங்களுடன், வத்திக்கானின் நிறங்களையும் பிரதிபலிக்கும் மஞ்சள்-ஆரஞ்சு, பச்சை ஆகிய நிறங்கள் இலச்சினையில் இணைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

கனகத்தூதன்
Canadian Tamil Catholic Messenger
CanaCaThuthan

நிறுவனர்/Founder:
அன்ரன் சின்னராசா பிலிப்
Anton Sinnarasa Philip

ஆசிரியர் குழு இணைப்பாளர்/
Editorial board coordinator:
ஆனந்தம் அன்ரனி
Anantham Antony

canacathuthan@gmail.com
416.300.7026

நிர்வாகம்/Administration:
அஞ்சலோ சுவாம்பிள்ளை
Angelo Swampillai

கனகத்தூதன் (கனடாவின் கத்தோலிக்க தூதனாக) கடவுளின் அரும்பெரும் செயல்களை எடுத்துரைக்கவும், தனது வாசகர்களுக்கு திருச்சபையின் போதனைகளையும் அறிவுறுத்தவும், ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தவும், விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தவும், உலக, தாயக, கனடிய கத்தோலிக்க செய்திகளை உண்மையான வழியில் தரவும் முயற்சி செய்வான்(ள்). கனகத்தூதனில் தோன்றும் ஆக்கங்கள், படைப்புகள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்பாவர். விளம்பரங்களில் இடம் பெறும் தகவல்களுக்கு கனகத்தூதன் பொறுப்பல்ல.

The CanaCa Thuthan EVANGELIZES by proclaiming stories of God's great deeds taking place in the universal Church. CanaCa Thuthan EDUCATES by challenging its readers to a deeper understanding of Catholic teaching and to a greater commitment in living it out. CanaCa Thuthan INFORMS by providing objective and accurate news information about the church, both local and worldwide. CanaCa Thuthan does not take the responsibility of the views expressed by various authors and the information in the advertisements.

கனகத்தூதனை
இப்போது e-paper ஆகவும்
வாசித்திடலாம்.

தங்கள் பிரதிகளுக்கு
canacathuthan@gmail.com
or
416 300 7026

Layout Consultation,
Artwork & Design
PrintFast.ca

# ஆசிரிய குழுவின் எண்ணங்கள்...

அன்பார்ந்தவர்களே,

இறைவன் நமக்கு ஆசீர் நிறைந்த வாழ்க்கை அருளியிருக்கிறார். அதற்காக முதலில் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

ஒவ்வொரு மனித உயிரும் இறைவனின் புனிதமான கொடை என்பதை உணர்ந்து, அதன் மாண்பைப் பாதுகாக்க இறை மக்களாகிய நாம் அழைக்கப்படுகிறோம். அத்துடன் நிபந்தனையின்றி வாழ்வை வரவேற்கவும், பலவீனமானவர்களைக் கனிவோடு அரவணைக்கவும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் கண்ணியத்துடன் கடந்து செல்லவும். குரலற்றவர்களின் குரலாக நின்று அவர்களைத் துணிவோடு பாதுகாக்கவும் வேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். ஏழைகள், துன்புறுவோர் மற்றும் சமூகத்தின் ஓரங்களில் வாழும் மக்களுக்கான அன்புப் பணிகளைத் முன்னெடுப்போம்.
"அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கட்டும்" என்று இயேசு கூறியதை எடுத்துக்காட்டிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் உலகில் நிலவும் பிளவுகள் மற்றும் கருத்து மோதல்களுக்கு, உரையாடலின் வழியாக ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கும் "நல்லிணக்கத்தின் இறைவாக்கினர்களாக" விளங்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். மேலும், இறையாட்சி அதிகாரத்தாலும் வல்லமையாலும் அல்ல, மாறாக தாழ்மை, பொறுமை மற்றும் அன்பின் வழியே அமைதியாக வளர்கிறது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அழைப்பை மனதில் கொண்டு, குடும்பங்கள், பங்குகள் மற்றும் சமூகங்களில் அமைதியையும் ஒன்றிப்பையும் வளர்க்க இறைமக்களாகிய நாம் அழைக்கப்படுகிறோம்.  ஒற்றுமை என்பது தானாக நிலைத்திருப்பதில்லை; மாறாக, நேர்மையான மற்றும் தாழ்மையான உரையாடலின் வழியாக வளர்க்கப்பட வேண்டியதுதொன்று. அதாவது வெற்றியையும் பெருமையையும் அல்ல, தங்களைச் சிறியவர்களாக்கி பிறருக்குச் சேவை செய்யும் வாழ்வை ஏற்றுக்கொள்ளும்போது மட்டுமே இந்த முயற்சி வெற்றியடையும் என்பது நிச்சயம்.

சிறு குழந்தைகளை வளர்ந்த மனிதர்களோடு ஒப்பிடுகின்ற பொழுது. அவர்கள் பல தன்மைகளில் உயர்ந்து நிற்கின்றனர். வளர்ந்த மனிதர்களை விட குழந்தைகளின் மகிழ்ச்சி உயர்ந்ததாக இருக்கின்றது. கடந்த காலத்தை நினைத்து கண்ணீர் வடித்தும் எதிர்காலத்தை நினைத்து பெருமூச்சு விட்டும் குழந்தைகள் நிகழ்காலத்தை தொலைப்பதில்லை. அவர்கள் நிகழ்கால உலகில் மட்டுமே தங்களின் வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். யாரையும் போட்டியாளர்களாக கருதி அவர்கள். தங்களை நிரூபிக்க வேண்டும் என்று எந்த முட்டாள்தனமான முயற்சியையும். மேற்கொள்வதில்லை. சண்டைகள் போட்டுக் கொண்டால் கூட சிறிது நேரத்திலேயே சமாதானம் ஆகிவிடுகின்றனர். வாழ்க்கையை அதன் ஓட்டத்திலேயே வாழ்கிறார்களே தவிர. தங்களது ஆசைகளுக்கு ஏற்ப அதை கட்டுப்படுத்தி வளைக்க முனைவதில்லை. இதன் காரணமாக. அவர்களின் வாழ்வு சூமுகமானதாகவும் சுகமானதாகவும் மகிழ்வானதுமாக இருக்கின்றது.  எனவே குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதில் ஆர்வமாக இருப்பதைவிட அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதில் நாம் ஆர்வம் காண்பிக்கலாமே. காரணம் இறையாட்சி அவர்களுடையதே! அதாவது முழு மனித வாழ்வு அவர்களுடையதே.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக. வாழ்வதற்கான வழி குழந்தையாக மாறுவது தான். குழந்தையின் மன நிலை எம்மிடம் இருக்கும் போது, வாழ்வில் எந்தச் சூழலையும் எம்மால்இலகுவாக. கடந்து செல்ல முடியும். அறிவும் அதன் எச்சமான அகந்தையும் ஆதிக்கம் செலுத்தாத பருவம் தான் குழந்தைப்பருவம் வளர்ந்த பின்பு அறிவு நம்மை ஆதிக்கம் செலுத்தாமல் நாம் அறிவின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களாக இருந்தோம் என்றால் குழந்தைகளாக வாழ நாம் முயல்கிறோம் என்று பொருள். அறிவை பயன்படுத்தாதோர் குழந்தைத்தனமானவர்கள். அறிவின் எல்லைகளை உணர்ந்து அதைத் தாண்டி செல்வோர் குழந்தையின் மனம் கொண்டோர். இத்தகையோருக்கே முழு மனித மகிழ்ச்சி இயலுமான ஒன்று. அமைதியையும் ஒன்றிப்பையும் வளர்க்கவும் மகிழ்ச்சியாக வாழவும் குழந்தை தனம் அல்ல குழந்தை மனமே வேண்டும்.

ஆனால் நாம் குழந்தை தனம் உடையவர்களாக அகந்தந்தையோடு யார் பெரியவன் என்ற போட்டி மனப்பான்மையுடன் வாழ்வதால் நம்மிடையே போட்டியும் பிளவுகளும் தாண்டவம் ஆடுகிறன. இதனால் நாம் மகிழ்ச்சியை இழப்பது மட்டுமல்ல எம்மை சூழ்ந்திருப்போர் மகிழ்ச்சியையும் அழித்துவிடுகிறோம்.

மாறாக குழந்தை மனதுடன் போட்டி, பிளவு களைந்து, தாழ்மை, பொறுமை மற்றும் அன்பின் வழியே ஒன்றாக, குரலற்றவர்களின் குரலாக நின்று அவர்களைத் துணிவோடு பாதுகாப்போம்! இறையாட்சியை எமதாக்குவோம்! மகிழ்ச்சியாக வாழ்வோம்! அர்ப்பணிப்புடன் ஒவ்வொரு மனித உயிரையும் நேசித்து, அதன் ஒப்பற்ற மாண்பை வார்த்தைகளாலும் செயல்களாலும் உலகிற்கு அறிவிக்கும் சாட்சிகளாக வாழ்வோம்!

- ஆசிரியர் குழு

கனகத்தூதனை  இப்போது e-paper ஆகவும் வாசித்திடலாம்.
தங்கள் பிரதிகளுக்கு
canacathuthan@gmail.com or 416 300 7026

# முதியவர்கள் சுமையல்ல, பேணிப் பாதுகாக்க வேண்டிய இறைவனின் கொடை !



ஜூலை 26, ஞாயிறன்று, புனிதர்கள் சுவக்கீன், அன்னா திருவிழாவையொட்டி கொண்டாடப்பட்ட ஆறாவது உலக தாத்தா-பாட்டிகள் மற்றும் முதியோர் நாளை முன்னிட்டு, முதியவர்கள் சுமை அல்ல; பேணிப் பாதுகாக்க வேண்டிய இறைவனின் கொடை " என்று வலியுறுத்திய பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வுக்கான திருப்பீடத்துறையின் *(Dicastery for Laity, Family and Life)* முதியோர் மேய்ப்புப் பணியின் பொறுப்பாளர் வித்தோரியோ ஸ்கெல்சோ *(Vittorio Scelzo)* அவர்கள், கோவிட் - 19 பெருந்தொற்று காலத்தில் தொடங்கப்பட்ட இந்த உலக நாள், ஆண்டுதோறும் முக்கியத்துவம் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் முதியவர்களை பராமரிப்பு பெறுபவர்களாக மட்டுமன்றி, திருஅவையின் மறைப்பணியில் தீவிர பங்காளிகளாகக் காண்பதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் இவ்வாண்டு உலக நாளுக்கான கருப்பொருளான "நான் உங்களை ஒருபோதும் மறக்கமாட்டேன்" (எசாயா 49:15) என்ற இறைவார்த்தைகளை எடுத்துக்காட்டிய ஸ்கெல்சோ அவர்கள், குறிப்பாக தனிமையில் வாழும், நோயுற்ற அல்லது வீட்டை விட்டு வெளியே வர இயலாத முதியவர்களை நேரில் சென்று சந்திப்பதன் மூலம் இறைவனின் அன்பை செயலில் வெளிப்படுத்துமாறு அனைத்து கிறிஸ்தவ சமூகங்களுக்கும் அழைப்பு விடுத்தார். முதுமைப் பருவத்தில் மிகப்பெரிய சவாலாக இருப்பது தனிமை உணர்வே என்றும், வெறும் சேவைகளை வழங்குவதைக் கடந்து, நிலையான உறவுகளை உருவாக்கும் சமூகங்களாக பங்குகள் மாற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உலகின் பல மறைமாவட்டங்களில், தன்னார்வலர்களின் இல்லச் சந்திப்புகள், தலைமுறைகளை இணைக்கும் நிகழ்ச்சிகள், இளைஞர்கள் முன்னெடுக்கும் விழிப்புணர்வு இயக்கங்கள் போன்ற பல படைப்பாற்றல்மிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

முதுமை என்பது ஆன்மிக ஓய்வுக்காலம் அல்ல; அது இறைவன் அளிக்கும் ஓர் அழைப்பு என்ற திருத்தந்தை அவர்களின் கருத்தை சுட்டிக்காட்டிய ஸ்கெல்சோ அவர்கள், முதியவர்கள் செப வாழ்வில் நிலைத்து, உலக அமைதிக்காக மன்றாடும் முக்கியப் பணியை ஏற்குமாறு அழைப்பு விடுத்ததுடன், எந்தப் பங்கிலும் எந்த ஒரு முதியவரும் புறக்கணிக்கப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

---

# உலகம் வாழ்வைப்...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

LEON XIV
25 - 28 SEPT. FRANCE 2026
POUR QUE LE MONDE AIT LA VIE

**பயணத்தின் குறிக்கோள்:**

உலகம் வாழ்வைப் பெறுவதற்காக என்ற இந்தக் குறிக்கோள், நம்பிக்கை மற்றும் ஒன்றிப்பிற்கான அழைப்பாகவும், பிரிவினைகளைத் தாண்டி அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான அழைப்பாகவும் விளக்கப்பட்டுள்ளது.

இறைவனிடமிருந்து வரும் வாழ்விற்கு சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பத்துடன், மகிழ்ச்சியுடனும் திறந்த மனதுடனும் திருத்தந்தையின் வருகையை வரவேற்கும் பிரான்ஸ் திருஅவையின் உணர்வை இந்தக் குறிக்கோள் வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்கும் திருத்தந்தை**

திருத்தந்தையின் பிரான்ஸ் பயணத்திற்கான அதிகாரப்பூர்வ நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்ட அதே நேரத்தில், திருத்தந்தையின் பயணத்தின்போது, திருத்தந்தையின் பிரான்ஸ் நாட்டுத் திருத்தூதுப் பயணத்திற்கான அதிகாரப்பூர்வ நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்ட அதேவேளையில், இப்பயணத்தின்போது திருச்சபையில் இடம்பெற்ற பாலியல் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட சிலரைத் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் தனிப்பட்ட முறையில் சந்திக்கவுள்ளதாக திருப்பீடச் செய்தித் தொடர்பகம் அறிவித்துள்ளது.

எனினும், சந்திப்பு நடைபெறும் தேதி, இடம் மற்றும் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை குறித்து இதுவரை கூடுதல் விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஸ்பெயினுக்கான தனது திருத்தூதுப் பயணத்தின்போதும் இதேபோன்று வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களைத் திருத்தந்தை சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருத்தந்தையின் வருகைக்கான தன்னார்வலர்கள் மற்றும் இணையதளம்**

பல மாதங்களுக்கு முன்பே, திருத்தந்தையுடன் இணைந்து இப்பயணத்திற்கான ஆரம்ப நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கத் தொடங்கினோம். அதன்பின்னர், வத்திக்கானில் உள்ள எங்கள் ஒத்துழைப்பாளர்கள், பிரான்ஸ் ஆயர் பேரவை, பாரிஸ் மற்றும் மெட்ஸ் மறைமாவட்டங்கள், லூர்து திருத்தலம் ஆகியவற்றுடன் இணைந்து, இந்தப் பயணத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒருங்கிணைக்க தீவிரமாகப் பணியாற்றினோம். இப்போது இந்தப் பயணத் திட்டத்தை பிரான்ஸ் மக்களுடன் பகிர்ந்துகொள்வது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்று மார்செய் பேராயரும் பிரான்ஸ் ஆயர் பேரவையின் தலைவருமான கர்தினால் ஜீன்-மார்க் அவெலின் தெரிவித்துள்ளார்.

மேலும், பொந்துவாஸ் மறைமாவட்ட ஆயர் பெனுவா பெர்ட்ரான்ட் கூறுகையில், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் பங்கேற்க விரும்பும் அனைவரும் பங்கேற்கும் வகையில் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நிகழ்வுக்கான நடைமுறை ஏற்பாடுகள் நிறைவுபெறும் நிலையில், தேவையான தகவல்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும் என்றார்.

திருத்தந்தையின் வருகையின்போது பங்கேற்பாளர்களை வரவேற்பதற்கும், நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதற்கும் பாரிஸ் மறைமாவட்டம் 10,000 தன்னார்வலர்களை இணைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

பிரான்ஸ் திருஅவை திருத்தந்தையின் வருகைக்கென தனிப்பட்ட இணையதளத்தையும் தொடங்கியுள்ளது. இந்த இணையதளத்தின் வழியாக, மக்கள் இலவசமாகத் தன்னார்வலர்களாகப் பதிவு செய்துகொள்ளவும், திருத்தந்தையின் பயணத்திற்கான ஏற்பாடுகளுக்கு ஆதரவாக நன்கொடை வழங்கவும் முடியும்.

# அன்னைமரியா ஓர் அதிசயம் - இலங்கை மடு அன்னை திருத்தலம்

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

"காட்டில் குடியிருக்கும் கானகச் செல்வியாம் மடு அன்னைக்கு மடுப்பதியில் மகோன்னத விழா. தேசிய இன ஒன்றிப்புக்கு களமாக அமையும் மடுத் திருப்பதி!" என்று இலங்கையின் மன்னார் மறைமாவட்ட அருள்பணி தமிழ் நேசன் இணையத்தளத்தில் எழுதியுள்ளார்.

"கேட்ட வரம் அளிக்கும் கீர்த்திபெற்ற சீமாட்டி, காட்டில் குடியிருக்கும் கருணையுள்ள என் தாயே, பாட்டில் மலர் தொடுத்தேன் பாலோடு தேன் எடுத்தேன், நாட்டில் அமைதி என்ற நதியைத் திரும்பவிடு" என்று மடு அன்னைக்கு பாமாலைச் சூட்டினார், சொல்லின் செல்வர் இளவாலை அமுது என்ற ஈழத்துப் புலவர்.

வனவிலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மத்தியில், எழில்மிகு அன்னையாக, கானகச் செல்வியாக மடு அன்னை கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அவ்வன்னையை அண்டிவரும் அனைவருக்கும் அவர் அடைக்கலம் கொடுத்து, அருள்மழை பொழிகின்றார். இந்த மடு அன்னை திருவிழா, ஆகஸ்ட் 15 மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சிங்களவர், தமிழர் என்ற இனப்பாகுபாடின்றி, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், புத்தம் என்ற சமய வேறுபாடின்றி அனைத்து மக்களும் மடு அன்னைத் திருத்தலம் வந்து அன்னையின் அருளாசீர் பெற்றுச் செல்கின்றனர். தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை என்ற உணர்வோடு மக்கள் இந்த மடுத் திருத்தலத்துக்கு வருகின்றனர்.




மடு அன்னை திருத்தலம், 468 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டது. 16ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம், யாழ்குடாப் பகுதிகள், மாந்தை பெருநிலப்பரப்பு, மன்னார்தீவு போன்றவை யாழ்ப்பாண அரசாக விளங்கின. அக்காலத்தில் இந்தியாவின் தென்கரையோரங்களில் வாழ்ந்துவந்த கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண அரசில் கிறிஸ்துவைப் பற்றி அறிந்திராத மக்களுக்கு இறைவார்த்தையைப் போதிக்கத் தொடங்கினர். இவர்கள் மூலமாக தூய பிரான்சிஸ் சவேரியாரின் மறைப்பணி ஆற்றலையும், புதுமைகளையும் கேள்வியுற்ற மன்னார் மக்கள், 1544ம் ஆண்டில் இப்புனிதரை மன்னார்த் தீவுக்கு வருமாறு ஓர் தூதுக்குழுவினர் மூலமாக ஒலை அனுப்பினர். அச்சமயத்தில் புனித சவேரியாரால் வரமுடியாத காரணத்தினால், தனது பிரதிநிதியாக, சவேரியார் என்ற அருள்பணியாளரை அனுப்பி வைத்தார் அவர். இந்த அருள்பணியாளர் மன்னார் தீவுக்கு, குறிப்பாக, பட்டிமுக்கு வந்து போதித்தார். 600க்கும் அதிகமான மக்கள் கிறிஸ்தவர்களானார்கள். அச்சமயத்தில் யாழ்ப்பாண அரசராக இருந்த சங்கிலியன் என்பவர், மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்குத் தொல்லை கொடுத்து அவர்களைக் கொலை செய்தார்.

1582ஆம் ஆண்டில் அரசக் குடும்பத்தைச் சேர்ந்த கத்தரீனா என்ற இளம்பெண் கிறஸ்தவத்தைத் தழுவினார். இப்பெண் மன்னாரில் சிறிதுகாலம் தங்கி கிறிஸ்தவத்தைப் பரப்பினார். இதனால் 1583ஆம் ஆண்டில் 26 ஆலயப் பங்குகளில் 43 ஆயிரம் கிறிஸ்தவர்கள் மறைந்திருந்து கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் விளங்கினர். இவ்வாறு ஏற்பட்ட 26 பங்குகளில் மன்னார், தள்ளாடி, திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள மாந்தை அன்னைமரி ஆலயமும் உள்ளடங்கும். செபமாலை அன்னைமரி என்று தற்போது அழைக்கப்படும் மடு அன்னையின் திருவுருவம் மாந்தை பிட்டியில் அமைந்துள்ள தற்போதைய லூர்துகெபியில்தான் முதலில் இருந்தது. 1658ஆம் ஆண்டில் மாந்தையில் உள்ள ஆரோக்கிய அன்னைமரி ஆலயம், டச்சுக்காரரின் ஆட்சியின்கீழ் வந்ததால் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் செபமாலை அன்னையின் திருவுருவத்தை வன்னிக்கு எடுத்துச்சென்றனர். 1669ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் இலங்கைத் தீவை மீண்டும் கைப்பற்றியபோது, அவர்கள் கத்தோலிக்கரை அடக்கி ஒடுக்கி நசுக்கினர். இந்தக் கலவரத்திலிருந்து தங்களையும், செபமாலை அன்னை திருவுருவத்தையும் பாதுகாக்கும் பொருட்டு அதற்கு அடுத்த ஆண்டில் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர். அருள்பணியாளர்களின் துணையில்லாத அந்த வேளையிலும், மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை அன்னையின் திருவுருவத்தைத் தூக்கிக்கொண்டு, அடர்ந்த வன்னிக் காட்டினுள் புகுந்தனர். திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக 'மருதமடு' என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி அன்னையின் வழிநடத்தலோடு வந்து சேர்ந்தனர்.

அதேசமயம், யாழ்ப்பாண நகரில் டச்சு நாட்டினரின் கத்தோலிக்கருக்கு எதிரான அடக்குமுறையும் தொடர்ந்துகொண்டிருந்தது. எழுநூறு கிறிஸ்தவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்காட்டிற்குள் புகுந்தனர். அவர்கள் பூநகரியைக் கடந்து பயத்தோடும் பதட்டத்தோடும் அடர்ந்த காட்டினுள் அலைந்துகொண்டிருந்தனர். ஏற்கனவே அங்கு வந்திருந்த மாந்தைக் கிறிஸ்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து தப்பிவந்தவர்களில் போர்த்துக்கீசிய தளபதியின் மகளாகிய 'எலேனா' என்பவரும் ஒருவர். இவர்தான் முதன்முதலில் மடு அன்னைக்கு சிறிய ஆலயம் அமைத்தார். அவருடைய இந்த நற்செயலுக்காக கிறிஸ்தவர்கள் இந்த இடத்தை 'சிலேனா மருதமடு' என்று அழைத்தனர். இந்த இடம்தான் இன்றைய மடுத்திருத்தலப் பகுதியாகும்.

இந்த மடு அன்னையின் பரிந்துரையால் அன்றுமுதல் இன்றுவரை பல அற்புதங்கள் நடைபெற்று வருகின்றன. மடு அன்னை திருவுருவம், இப்பகுதிக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் அதன் சுற்று வட்டாரத்தில் நச்சு உயிரினங்களின் ஆபத்துக்கள் வெகுவாகக் குறைந்தன. காலப்போக்கில் மடு அன்னை எழுந்தருளியிருக்கும் இடத்து மண்ணை மக்கள் நம்பிக்கையுடன் எடுத்துச்சென்று தங்களது தீராத நோய்களைத் தீர்த்ததாக வரலாறு சொல்கின்றது. இத்திருத்தலத்தின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு, ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச்சென்று குணமளிக்கும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். 'கோயில் மருந்து' என்று இது அழைக்கப்படுகின்றது. நோய்க்கு மருந்தாகவும், தீய சக்திகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் கவசமாகவும் மக்கள் இதைக் கருதிப் பயன்படுத்துகின்றனர். இந்த மண்ணை நீரில் கரைத்து நோயாளிகளுக்கு குடிக்கக் கொடுக்கின்றனர். நெற்றியிலும், நெஞ்சிலும் பூசுகின்றனர். தீமைகள் தங்களை அணுகாவண்ணம் தங்கள் வீட்டு மூலைகளில் தெளிக்கின்றனர். இச்செயல் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இத்திருத்தலத்தை அடைந்ததும் குணம் பெறுகின்றனர் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும். சொந்த சுமையைத் தூக்கித் தூக்கி சோர்ந்து

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

கனகத்தூதன்
CanaCaThuthan

# உலக பழங்குடியினர் தினம்



உலகப் பழங்குடியின மக்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9 ஆம் தேதி உலகம் முழுவதும் மிக உன்னதமான முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது. பூமியின் பல்வேறு பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் அடிப்படை மனித உரிமைகள், அவர்களின் தொன்மையான பண்பாடு, தனித்துவமான கலைகள் மற்றும் பாரம்பரிய வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதன் அவசியத்தை உலக நாடுகளுக்கு வலியுறுத்துவதே இந்நாளின் முதன்மை நோக்கமாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இவர்களின் வாழ்வியலைப் போற்றுவது, மனிதகுலத்தின் பன்முகத்தன்மையை மதிப்பதற்கான மிகச் சிறந்த தொடக்கமாக நமது சமுதாயத்தில் அமைகிறது. பழங்குடியின மக்கள் இந்த உலகின் மிகத் தொன்மையான பழங்குடிச் சமூகங்களில் ஒன்றாக, மனித நாகரிகத்தின் ஆதி வேர்களாகக் கருதப்படுகின்றனர். நவீன உலகத்தின் எத்தகைய ஆடம்பரமானதும் இயந்திரத்தனமானதுமான மாற்றங்களுக்கும் உட்படாமல், அவர்கள் தலைமுறை தலைமுறையாகத் தங்களின் வாழ்வாதாரத்திற்காக இயற்கையுடன் ஒன்றிணைந்து, காடுகளோடும் மலைகளோடும் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இயற்கையைத் தெய்வமாக மதித்து, அதனோடு எவ்வித முரண்பாடுகளும் இன்றி வாழ்வதே இவர்களின் ஒட்டுமொத்த வாழ்வியலின் முக்கிய தத்துவமாக காலம் காலமாக இருந்து வருகிறது. தற்போதைய சூழலில் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான வெவ்வேறு பழங்குடியின சமூகங்கள் பல்வேறு கண்டங்களில் பரவி வாழ்ந்து வருகின்றன. வியக்கத்தக்க வகையில், இவற்றுள் வாழும் ஒவ்வொரு தனித்துவமான பழங்குடிச் சமூகத்திற்கும் என்று தங்களின் சொந்த மரபுகளைக் கொண்ட தனித்தனி மொழிகள், அரிய கலாச்சாரக் கூறுகள், வழிபாட்டு முறைகள் மற்றும் ஆழமான பாரம்பரிய விழுமியங்கள் உள்ளன. இத்தகைய மாறுபட்ட வாழ்வியல் முறைகளே உலகிற்கு ஒரு புதிய அழகையும், மனித இனத்தின் ஆதி வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கான அரிய வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

பழங்குடியின மக்களின் அன்றாட வாழ்க்கை முறையானது இயற்கையோடு மிகவும் நெருங்கிய, பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டதாகும். தங்களைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், ஓடும் தூய்மையான ஆறுகள் மற்றும் தங்களின் நில வளங்களை அவர்கள் தங்களின் சொந்தக் குழந்தைகளைப் போலப் பொறுப்புடன் பாதுகாத்து வருகின்றனர். இயற்கையைச் சுரண்டாமல், அதனிடமிருந்து தங்களுக்குத் தேவையானவற்றை மட்டும் அளவோடு பெற்றுக்கொண்டு, எஞ்சியவற்றை எதிர்காலத்திற்காகப் பாதுகாக்கும் உன்னதப் பண்பை அவர்கள் கொண்டுள்ளனர்.

இவர்களின் பாரம்பரிய அறிவும், முன்னோர்களின் இன்றைய உலகை அச்சுறுத்தும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், நிலையான வளர்ச்சிக்கும் *(Sustainable Development)* பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. காடுகளையும் காட்டில் வாழும் விலங்குகளையும் எவ்வாறு இயற்கையான முறையில் பாதுகாக்க வேண்டும் என்ற அரிய ரகசியங்களை அவர்கள் தங்களின் தனித்துவமான வாழ்வியல் முறைகளின் மூலம் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இயற்கையைச் சிதைக்காமல் அதனுடன் இணைந்து வாழும் இவர்களின் வாழ்க்கை முறை, ஒட்டுமொத்த உலகிற்கும் ஒரு மிகச்சிறந்த வழிகாட்டியாக அமைகிறது.

ஆயினும், இத்தகைய பெருமைகளைக் கொண்ட பல பழங்குடியின மக்கள் இன்றைய நவீன உலகிலும் இன்னும் முறையான கல்வி, தரமான சுகாதாரம் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைக்காமல் பின்தங்கிய நிலையிலேயே வாழந்து வருகின்றனர். நவீன மருத்துவ வசதிகள் அவர்களின் வாழ்விடங்களுக்குச் சென்றடையாததால், பல இன்னல்களுக்கு அவர்கள் ஆளாக நேரிடுகிறது. எனவே, அவர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில், அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் கல்வி மற்றும் சமூக தளங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

பழங்குடியின மக்களின் நில உரிமைகளையும், அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தையும் சட்டப்பூர்வமாகப் பாதுகாப்பது தற்போதைய காலகட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்றாகும். அவர்களின் முன்னோர்கள் வாழ்ந்த பாரம்பரிய நிலங்களையும், காடுகளையும் அவர்களின் அனுமதியின்றி ஆக்கிரமிக்காமல் மதித்துப் பாதுகாக்க வேண்டும். நிலமே அவர்களின் அடையாளம் என்பதால், நிலத்திற்கான உரிமைகளை அவர்களுக்கு உறுதி செய்வது, அவர்களின் கலாச்சாரம் மற்றும் பூர்விக அடையாளங்கள் காலப்போக்கில் அழியாமல் இருப்பதற்கான மிக முக்கிய அரணாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய உலகில் பொருளாதார வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கல் என்ற பெயரில், பல பழங்குடியின சமூகங்கள் தங்களின் பூர்விக வாழ்விடங்களை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் அவல நிலை பரவலாக உருவாகியுள்ளது. இத்தகைய இடப்பெயர்வுகள் அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தை முற்றிலும் சிதைப்பதுடன், அவர்களின் தனித்துவமான கூட்டு வாழ்க்கை முறை மற்றும் கலாச்சார அடையாளங்கள் உலக வரைபடத்திலிருந்து நிரந்தரமாக அழிந்து போவதற்கும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்துவிடுவதால் இதனைத் தடுத்து நிறுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும்.

பழங்குடியின மக்களின் பூர்விக மொழிகள், வாய்மொழி இலக்கியங்கள் மற்றும் தொன்மையான கலை மரபுகள் யாவும் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் விலைமதிப்பற்ற பாரம்பரியச் செல்வங்களாகும். எழுத்து வடிவம் இல்லாத இவர்களின் பல மொழிகள் இன்று பேச ஆள் இல்லாமல் அழியும் ஆபத்தில் உள்ளன. இத்தகைய அரிய மொழிகளையும், கலைகளையும் ஆவணப்படுத்தி, அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்து அழியாமல் பாதுகாப்பது பூமியில் வாழும் விழிப்புணர்வுள்ள நம் அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும்.

பழங்குடியின மக்களின் தனித்துவமான இசை, பாரம்பரிய நடனங்கள், இயற்கை மூலப் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் கைவினைப் பொருட்கள் மற்றும் அவர்களின் அரிய பாரம்பரிய மருத்துவ அறிவு போன்றவை உலகம் முழுவதும் பெரிதும் பாராட்டப்படுகின்றன. பக்கவிளைவுகள் இல்லாத இவர்களின் மூலிகை மருத்துவ முறைகள் பல நோய்களுக்குச் சிறந்த தீர்வாக அமைகின்றன. இத்தகைய கலைகளும் அறிவும் அவர்களின் வெறும் பொழுதுபோக்கு அம்சங்கள் மட்டுமல்லாமல், அவர்களின் உன்னத பண்பாட்டு அடையாளங்களாகவும் விளங்குகின்றன.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பழங்குடியின மக்களுக்குச் சமமான வாய்ப்புகள் தங்கு தடையின்றி வழங்கப்படும்போது, அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்கிறது. தங்களின் உரிமைகளுக்காக அவர்களே குரல் கொடுக்கும் ஆளுமை இதன் மூலம் உருவாகிறது. சமுதாயத்தின் விளிம்பு நிலையில் வாழும் இவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமே நாட்டில் உண்மையான சமூக நீதியும், சமத்துவமும், மனிதநேயமும் அடிமட்டம் வரை சென்று வலுப்பெறுகின்றன. அதே வேளையில், பழங்குடியின மக்களின் வாழ்விடங்கள் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அவர்களின் சுயசார்பான கருத்துகளுக்கும், பாரம்பரிய முடிவுகளுக்கும் அரசாங்கங்கள் உரிய முன்னுரிமையும் மரியாதையும் அளிக்க வேண்டும்.

முடிவாக, உலகப் பழங்குடியின மக்கள் தினம் என்பது அவர்களின் தொன்மையான பண்பாடு, பாரம்பரிய அறிவு, உரிமைகள் மற்றும் மனித மாண்பை ஒட்டுமொத்த உலகமும் மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் ஒரு உன்னதமான நாளாகும். பழங்குடியின மக்களின் கண்ணியம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் அவர்களின் பங்கு மற்றும் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாப்பது மனிதகுலத்தின் பொதுவான கடமையாகும். இந்த நன்னாளில் நாமும் வேற்றுமைகளை மறந்து, சமத்துவம், இரு தரப்பு மதிப்பு, ஒற்றுமையுடன் வாழும் ஒரு மிகச்சிறந்த உலகை உருவாக்க அனைவரும் இணைந்து செயல்பட மனதார உறுதிமொழி ஏற்போம்.

கனகத்தூதன்
CanaCaThuthan



## போரின் மத்தியில் அமைதிக்கும் நம்பிக்கைக்கும்

"போரின் காற்று" மீண்டும் வன்முறை, பயம் மற்றும் மரணத்தைப் பரப்பி வருவதாகவும், இதனால் அப்பாவிப் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக சமூகம் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கக் கூடாது என்று வலியுறுத்திய திருத்தந்தை, நீதியுடனும் நீடித்தும் நிலைக்கும் அமைதியை எட்டுவதற்கான ஒரே வழி பேச்சுவார்த்தை, நேருக்கு நேர் சந்திப்பு மற்றும் தூதரக முயற்சிகளே என்று வலியுறுத்தினார்.
மிகவும் சவாலான சூழல்களிலும் நம்பிக்கையின் ஒளியை அணையவிடாமல் காத்து வாழுமாறு உலக மக்கள் அனைவருக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.




## ஆசியத் திருஅவை அன்பிரக்கம், உரையாடலின் பாலங்களை அமைக்க வேண்டும்

ஆசியாவில் உள்ள கத்தோலிக்கத் திருஅவை கிறிஸ்துவுடனான தனது ஒன்றிப்பை ஆழப்படுத்தவும், ஆசியக் கண்டம் முழுவதும் அன்பிரக்கம், உரையாடல் மற்றும் தோழமையின் பாலங்களை அமைப்பதன் மூலம் கடவுளின் உடனிருப்பின் வலுவான அடையாளமாக மாறவும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜூலை 20 முதல் 26 வரை இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இடம்பெறும் ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் (FABC) 12-வது நிறைவிறுதிப் பேரவையில் பங்கேற்றவர்களுக்கு அனுப்பிய காணொளிச் செய்தியில், ஆசியாவில் உள்ள கத்தோலிக்கத் திருஅவை கிறிஸ்துவுடனான தனது ஒன்றிப்பை ஆழப்படுத்தவும், ஆசியக் கண்டம் முழுவதும் அன்பிரக்கம், உரையாடல் மற்றும் தோழமையின் பாலங்களை அமைப்பதன் மூலம் கடவுளின் உடனிருப்பின் வலுவான அடையாளமாக மாறவும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தப் பேரவையின் "இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்" (யோவான் 1:50)



என்ற கருப்பொருளை எடுத்துக்காட்டிய திருத்தந்தை, இயேசு கிறிஸ்துவே கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலான தனித்துவமான தொடர்பாளரும், கடவுளோடும் ஒருவரோடொருவர் கொள்ளும் ஒன்றிப்பின் அடித்தளமுமாவார் என்று வலியுறுத்தினார்.

தனது மகத்தான மானுடம் (*Magnifica humanitas*) என்ற திருத்தூது மடலையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, கிறிஸ்தவ ஒருமைப்பாடு கிறிஸ்துவின் மறைபொருளில் வேரூன்றி உள்ளது என்றும், அருள்சாதனங்கள், குறிப்பாக நற்கருணை மூலம் அது ஊட்டமளிக்கப்படுகிறது என்றும் எடுத்துக்காட்டினார்.

நற்கருணையிலிருந்து வெளிப்படும் அன்பிரக்கத்தின் மூலம் திருஅவையின் ஒற்றுமையை வலுப்படுத்தி, தங்கள் உள்ளூர் திருஅவைகளில் நற்கருணை பக்தியை வளர்க்குமாறு திருத்தந்தை ஆயர்களை வலியுறுத்தினார்.

இத்தகைய ஒற்றுமை உள்ளூர் திருஅவைகளுக்குள்ளும் அவற்றுக்கு இடையேயும் உள்ள தோழமையை வலுப்படுத்தும் என்றும், இது ஆசியா முழுவதும் கடவுளின் பிரசன்னத்தின் தெளிவான அடையாளங்களாகவும் சிறந்த பாலம் அமைப்பவர்களாகவும் அவற்றை மாற்றும் என்றும் அவர் கூறினார்.

இறுதியாக, திருஅவையின் அன்னையான தூய கன்னி மரியாவின் பரிந்துரைக்கு இந்தப் பேரவையை ஒப்படைத்து, கடவுளின் ஞானம், தைரியம் மற்றும் அவரது ஆசீரை வேண்டி தனது காணொளிச் செய்தியை திருத்தந்தை நிறைவு செய்தார்.

# செம்மணிக்கு நீதி கோரி யாழில் அமைதிப் போராட்டம்!




செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் புதைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு நீதி கோரி, யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டம் ஜூலை 30, 2026 செம்மணி பகுதியில் நடைபெற்றது.

ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்களின் ஒழுங்கமைப்பில், அரியாலை புனித யூதாததேயு திருச்சுரூபம் முன்பாக ஆரம்பமான பேரணி செம்மணி சந்தியைச் சென்றடைந்தது.

பேரணியின் நிறைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் திரு.டெர்க் அவர்களிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்கள் வாசித்தார்.

அறிக்கையில், 2026ஆம் ஆண்டு ஆடி மாதம் 21ஆம் திகதி வரையில் சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

மேலும், மனித எச்சங்களை அகழ்ந்தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை மினசோட்டா நெறிமுறை உள்ளிட்ட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்து, சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சாட்சியாளர்களின் பாதுகாப்பிற்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியம் என்றும் கோரப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாண மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.













# திருத்தந்தையின் புதிய நூல் "ஆயுதமற்றதும் ஆயுதங்களை அகற்றுவதுமானது:




அணு ஆயுதங்கள் அமைதியை உருவாக்குவதில்லை; மாறாக, ஆயுதக் குறைப்பே நிலையான அமைதியை உருவாக்கும்" என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டுள்ள "ஆயுதமற்றதும் ஆயுதங்களை அகற்றுவதுமானது: அமைதி ஒரு கொடை" *(Disarmed and Disarming: Peace Is a Gift)* என்ற புதிய நூலின் முன்னுரையில் திருத்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார். அலெசாண்ட்ரோ பான்ஃபி அவர்கள் தொகுத்துள்ள இந்நூல், 2025 மே 8 அன்று திருத்தந்தையாகப் பொறுப்பேற்றதிலிருந்து அமைதி குறித்து அவர் ஆற்றிய உரைகள், மறையுரைகள் மற்றும் சிந்தனைகளை ஒரே தொகுப்பாக வழங்குகிறது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு தமது சீடர்களுக்கு வழங்கிய முதல் வாழ்த்தான "உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்" என்ற வார்த்தையை நினைவுகூரும் திருத்தந்தை, சிலுவையின் துன்பங்களையும் வன்முறையையும் தாங்கி உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே உண்மையான அமைதியின் முன்மாதிரி எனக் குறிப்பிடுகிறார்.

இன்று உலகின் 103-க்கும் மேற்பட்ட நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ போர்களால் பாதிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டும் திருத்தந்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய "துண்டு துண்டாக நடைபெறும் மூன்றாம் உலகப் போர்" என்ற கருத்தை மீண்டும் நினைவூட்டுகிறார்.

அமைதி என்பது அரசியல் தலைவர்களின் பொறுப்பு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட பொறுப்புமாகும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். பிறரைத் தீர்ப்பிடுதல், குற்றம் சாட்டுதல், வெறுப்பை வளர்த்தல் போன்றவற்றிற்குப் பதிலாக, குடும்பம், பணியிடம், சமூக உறவுகள் ஆகியவற்றில் மன்னிப்பு, புன்னகை, அன்பான வார்த்தை போன்ற சிறிய செயல்களின் வழியே அமைதி கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுக்கிறார்.

அணு ஆயுதங்களே பாதுகாப்பை வழங்குகின்றன என்ற எண்ணத்தை நிராகரிக்கும் திருத்தந்தை, ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அனுபவங்களுக்குப் பின்னரும் உலகம் மீண்டும் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவது மனிதகுலத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக எச்சரிக்கிறார். "மீண்டும் ஒருபோதும் போர் வேண்டாம்" என்ற திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களின் வேண்டுகோள் இன்றும் பொருந்தும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

1983-ஆம் ஆண்டு அணு பேரழிவைத் தவிர்க்க உதவிய சோவியத் அதிகாரி ஸ்டானிஸ்லாவ் பெத்ரோவின் மனச்சாட்சிப்பூர்வமான முடிவை நினைவுகூரும் திருத்தந்தை, "ஒரே ஒருவரின் மனச்சாட்சி முழு உலகிற்கும் மதிப்புடையதாக இருக்க முடியும்" என்று வலியுறுத்துகிறார். மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்கள் போர் முடிவுகளை எடுக்கும் உலகம் மிகவும் அச்சமூட்டுவதாக இருக்கும் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

மேலும், ஆசீர்வதிக்கப்பட்ட ஃப்ளோரிபெர்ட் புவானா சுயி, இறை ஊழியர்கள் ஜியோர்ஜியோ லா பிரா மற்றும் டொரதி டே போன்றோர் அமைதிக்காக வாழ்ந்த சாட்சிகளாகத் திகழ்ந்ததை எடுத்துக்காட்டும் திருத்தந்தை, அமைதிக்கு சாட்சிகளாக வாழ அனைவரையும் அழைக்கிறார்.

அமைதி நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்று வலியுறுத்தும் திருத்தந்தை, அன்பு, இரக்கம், தன்னலமற்ற தியாகம் ஆகிய கிறிஸ்துவின் போதனைகளே வன்முறை, வெறுப்பு மற்றும் தனிமையை வெல்லும் ஆற்றல் கொண்டவை எனக் கூறுகிறார்.

இறுதியாக, வன்முறையற்ற வழியில் பயணித்து, அமைதியைக் காக்கும் பணியை ஒவ்வொருவரும் தங்களின் வாழ்வின் இலட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு அனைத்து நம்பிக்கையாளர்களையும், நல்லெண்ணம் கொண்ட அனைவரையும் அவர் அழைத்துள்ளார்.

தொகுப்பாசிரியர் அலெசாண்ட்ரோ பான்ஃபி இந்நூல் பற்றி கூறுவது:
திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் "ஆயுதமற்ற நிலையும் ஆயுதங்களை களைதலும் : அமைதி ஒரு கொடை" *(Disarmed and Disarming: Peace Is a Gift)* என்ற நூல், அமைதி குறித்த அவரது போதனைகளை உலக மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய முயற்சியாகும் என்று அதன் தொகுப்பாசிரியரான இத்தாலிய பத்திரிகையாளர் அலெசாண்ட்ரோ பான்ஃபி அவர்கள் வத்திக்கான் ஊடகத்துக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.
மேலும், "சூழல்கள் மாறுபட்டாலும், திருத்தந்தையின் ஒரே அக்கறை, உரையாடலை வளர்ப்பதும், பாலங்களை அமைப்பதும், 'நண்பர்-எதிரி' என்ற மனப்பான்மையைத் தாண்டி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுமாகும்" என்று பான்ஃபி அவர்கள் சுட்டிக்காட்டினார்.
2025 மே 8 அன்று திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், "உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்" என்ற வாழ்த்துடன் தனது திருப்பணியைத் தொடங்கிய திருத்தந்தை அவர்கள், அமைதியை தனது அனைத்து உரைகள், மறையுரைகள் மற்றும் சந்திப்புகளின் மையக் கருத்தாகக் கொண்டுள்ளார். இந்தப் பின்னணியில், வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூல், திருத்தந்தையின் அமைதி குறித்த முக்கிய சிந்தனைகளையும் உரைகளையும் ஒரே தொகுப்பாக வழங்குகிறது.
திருத்தந்தைக்கு இராணுவ வலிமை இல்லாவிட்டாலும், அவரது அறநெறி சார்ந்த அழைப்பு உலக மனச்சாட்சியைத் தூண்டும் ஆற்றல் கொண்டது என்றும், அதுவே உலகத் தலைவர்களையும் சிந்திக்க வைக்கும் சக்தியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
போர், வெறுப்பு, வன்முறை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவருவது நமது வீடுகளிலும், பணியிடங்களிலும், சமூக உறவுகளிலும் அமைதியை உருவாக்குவதிலிருந்து தொடங்குகிறது என்றும் அமைதி ஒவ்வொருவரின் தனிப்பட்ட பொறுப்பு என்றும், அது நம்மிடமிருந்தே தொடங்க வேண்டும் என்றும் திருத்தந்தை வலியுறுத்துகிறார் என்றும் பான்ஃபி அவர்கள் கூறினார்.

புனித அகுஸ்தீனாரின் இறைநகரம் *(De Civitate Dei)* என்ற நூல், திருத்தந்தை அவர்களின் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், நீதியையும் அமைதியையும் அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை உருவாக்குவது கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்பதை திருத்தந்தை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்து பான்ஃபி அவர்கள் நேர்காணலை நிறைவு செய்தார்.

# தூய ஆரோக்கிய அன்னை பங்கின் வருடாந்த ஒன்றுகூடல் - 2026

ஆகஸ்ட் 01 சனிக்கிழமை அன்று மோணிங்சைட் பூங்காவில் தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களின் வருடாந்த ஒன்று கூடல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பங்கு மக்கள் அனைவரும் உணவுகள் பரிமாறி, விளையாட்டுப்போட்டிகள், ஆடல் பாடல் என காலையில் இருந்து மாலைவரை பங்குபற்றி மகிழ்ந்தார்கள்.

இந்த ஒன்றுகூடல் பங்குமக்களை அன்பால் இணைக்கும் ஒரு பாலமாகும். இன்றைய இயந்திரத்தனமான வாழ்வில், மனித நேயத்தை வளர்க்கவும், சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை பேணவும் இத்தகைய ஒன்றுகூடல்கள் மிக அவசியமான ஒன்றாகும்.
















# மறைசாட்சியர்களின் திருத்தலம் - நம்பிக்கையும் யாத்திரையும் நிறைந்த 100 ஆண்டுகள் 39-வது ஆண்டு தமிழர் திருநாள்

தமிழ் கத்தோலிக்கர் தினத்தைக் கொண்டாடவும், புனிதத் தலத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவும் இந்த ஆண்டு ஜூலை 18 10,000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் மிட்லன்ட் மறைசாட்சியர்களின் திருத்தலத்திற்கு திரும்பயணம் மேற்கொண்டு நம்பிக்கையும் யாத்திரையும் நிறைந்த ஒரு நாளாக மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

மக்கள் செபித்து புனிதர்களின் வாழ்க்கையையும், அவர்கள் இறைநம்பிக்கையையும், தியாகங்களையும் கொண்டாடி, ஆன்மீகத்தை புதுப்பித்தது மட்டுமன்றி, தங்கள் அன்புக்குரியவர்களை வாழ்த்தி அவர்களுடன் ஒன்றாக உணவருந்தி, ஒரு சமூகமாக அந்த நாளைக் கழித்து மகிழ்ந்தனர். பலர் திருப்பயணிகளுக்குவேண்டுதலுடன் திருத்தலத்தில் சமைத்த உணவை பரிமாறி மகிழ்ந்தனர்.

இந்த ஆண்டு, சென்னை-மயிலை பேராயர் பேர்ருட்திரு ஜார்ஜ் அந்தோணிசாமி தலைமையில் மருதமடு அன்னையின் திருப்பீடத்தில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது சிறப்பாக அமைந்தது. அதைத் தொடர்ந்து மாலை நற்கருணை ஆராதனையும் ஆசீரும் சிறப்பாக இடம் பெற்றது.



























Foundation of your financial freedom!

**Mega Financial Group**



# LIVE LIFE FULLY COVERED

**COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET.**

**YOU & YOUR FAMILY**

## கவலை அற்ற நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்திட...

சிறந்த ஆலோசனைகளுக்கும் உங்களுக்கு ஏற்ற காப்புறுதியை
செய்வதற்கும் எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்.

- Life Insurance
- Non-Medical Insurance
- Travel Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RESP - *Education Saving Plan*
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products *(Through Funeral Homes)*

**416-666-1120**
**416-293-5559**

PH28-4168 Finch Ave. E
Scarborough, ON



**Now Hiring**
FULLTIME / PART TIME AGENTS

**FASTEST GROWING INSURANCE AGENCY**
*Well Established Name / Multicultural Agents / Great Support*

*Call Raj Nadarajah for more info*
*416 666 1120*

Assumption Life · iA Financial Group · UV · Desjardins · Equitable Life of Canada · RBC Insurance · Canada Life · Manulife Financial · Foresters Financial · Sun Life Financial · ASSURANT

# புனித திரித்துவத்தின் திருத்தலம் (Santuario della Santissima Trinit)



இத்திருத்தலம் இத்தாலியின் வல்லெபியேத்ராவில் அமைந்துள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மலை உச்சி புனிதத் தலமாகும். இது செங்குத்தான பாறைக் குன்றின் முகப்பிலேயே நேரடியாக செதுக்கப்பட்டிருப்பது இதன் தனிச்சிறப்பாகும். சிம்ப்ருய்னி மலைகள் பிராந்தியப் பூங்காவில் உள்ள மவுண்ட் ஆட்டோரேவில் அமைந்துள்ள இது, மேற்கு ஐரோப்பாவில் மக்களிடையே பரவலாக நிலைத்திருக்கும் நாட்டுப்புற பக்தி மரபின் மிகவும் தனித்துவமானதும் நீடித்தும் வரும் தலங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

சிறிய குகையில் தோன்றிய ஒரு மர்மமான ஓவியம்:

இந்தத் திருத்தலத்தின் தோற்றம் குறித்து பல எண்ண வெளிப்பாடுகள் உள்ளன. அதிகமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திருப்பயணிகள் தலைமுறை தலைமுறையாகக் வாய்மொழியாக சொல்லப்பட்ட புகழ்பெற்ற புராணக்கதைகளில் இந்தக் எண்ண வெளிப்பாடுகள் எப்போதும் மறைந்துவிடுகின்றன.

புகழ்பெற்ற தோற்றத்தைக் கொண்ட மிகவும் பரவலாகப் பேசப்படும் புராணக்கதை இவ்வாறு கூறுகிறது: மேலிருந்த மலையின் உச்சியில் ஒரு விவசாயி வயலை உழுது கொண்டிருந்தான். அப்போது அவன், கலப்பையுடன் ஓடிக்கொண்டிருந்த எருதுகள் 300 மீட்டர் கீழேயுள்ள பள்ளத்தாக்கில் பாய்ந்து தங்களைத் தாங்களே வீழ்த்திக் கொண்டதைக் கண்டான். அவன் அவசரமாகச் செங்குத்துப் பாறையின் அடிப்பகுதிக்குச் சென்று பார்த்தபோது, புதிரான திரித்துவ ஓவியத்தின் முன் எருதுகள் மண்டியிட்டிருந்ததை கண்டான். கனமான கலப்பை ஒரு பாறை விளிம்பின் புதர்களில் சிக்கியிருந்ததால், அந்த ஓவியம் ஒரு சிறிய குகைக்குள் தோன்றியது காணக்கூடியதாக இருந்தது.

மற்றொரு நம்பத்தகுந்த எண்ண வெளிப்பாட்டின்படி, இத்திருத்தலத்தின் அடித்தளத்தை புனித டொமினிக் ஆஃப் சோரா (1031) அமைத்ததாகக் கூறப்படுகிறது. இது இப்புனிதரின் வாழ்க்கை வரலாற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு பாரம்பரிய நடைப் புனிதப் பயணம்: புராணக்கதையைத் தாண்டி, மிகவும் நம்பத்தகுந்த எண்ண வெளிப்பாட்டின்படி, அந்த ஆட்டோர் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள துறவற மடத்தில் கிழக்கத்திய துறவிகள் தஞ்சம் புகுந்தார்கள் என்பதுதான். ஓவியத்தில் உள்ள "மூன்று நபர்களின்" கிரேக்க பாணியிலான ஆசி வழங்கும் தோரணையும் இந்த எண்ண வெளிப்பாட்டை நம்ப வைக்கிறது.

வல்லெபியேத்ராவில் உள்ள புனித திரித்துவ ஆலயத்தின் குகைக்குள் சில நற்செய்திக் காட்சிகளும் உள்ளன. விசுவாசிகள் மதரீதியான அமைதியுடன் உள்ளே நுழைந்து, சில நிமிடங்கள் கூடி நின்று வழிபட்டு நுழைவாயிலுக்கு எதிரே உள்ள கதவு வழியாக வெளியேறுகிறார்கள். "மூவருக்கும்" மதிப்பு அளிக்கும் முகமாக அவர்கள் பின்னோக்கி நடந்து வெளியேறுகிறார்கள்.

வழிபாட்டுத் தலம் அமைந்துள்ள இடத்தின் சிறப்பம்சமாக, கடல் மட்டத்திலிருந்து 1337 மீட்டர் உயரத்தில் உள்ள ஆட்டோர் மலையின் அடிவாரத்தில், கால்நடையாகப் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பாரம்பரியம் விளங்குகிறது. பெந்தெகொஸ்தே திருநாளுக்கு அண்மையில் உள்ள சிறப்பான இரவுகளில், சியோசியாரியா நகரங்களிலிருந்தும், சுப்லாசென்சிஸ் மற்றும் அப்ருஸ்சி பகுதிகளிலிருந்தும் பல எண்ணிக்கையில் ஊர்வலங்கள் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் கடந்து மேலே செல்கின்றன. அவர்கள் ; மழையையோ, கொளுத்தும் வெயிலையையோ, களைப்பையையோ பொருட்படுத்தாமல் துல்லியமாக அலங்கரிக்கப்பட்ட தங்கள் ஊரின் கொடியை சோர்வறியாத கைகளில் தம் தலைக்கு மேலே, ஏந்தியபடி செல்வார்கள் ஆண்டு முழுவதும் காத்திருந்து ஒரு சந்திப்பைத் தவறவிடக்கூடாது என்பதற்காக, நீண்ட நேரம் நடந்தும், இரவுகளைத் திறந்தவெளியில் கழித்தும் வரும் நம்பிக்கையாளரின் திரளை இது பெரிதும் கவர்கிறது.

திருத்தந்தையரின் முக்கியத்துவம்: நவீன காலப் புனிதப் பயணங்களிலும் இந்தப் புனிதத் தலம் தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் 2000ஆம் ஆண்டும், திருத்தந்தை பதினான்காம் லியோ 2026 ஜூலையிலும் எதிர்பாராத ஆன்மிகப் பயணமாகவும் இங்கு வருகை தந்தார்கள்.



கனகத்தூதன்
CanaCaThuthan

# ஈரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை அவசியம்; உலக அமைதிக்கு உரையாடலே வழி



உலகின் நன்மைக்காக ஈரானுடனான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்றும், காசாவிலும் அமைதியை ஏற்படுத்த உரையாடலே வழி என்றும், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். ஜூலை 22, புதனன்று, இத்தாலியில் உள்ள திருப்பீடத்திற்கான இத்தாலிய தூதரகமான பலாச்சோ பொரோமேயோவில் நடைபெற்ற, அன்டோனியோ பிரெசியோசி எழுதிய "*Easter of Peace: From John XXIII to Leo XIV Towards the Jubilee of 2033*" என்ற நூல் வெளியீட்டு விழாவின் ஒரு பகுதியாக செய்தியாளர்களிடம் பேசியபோது கர்தினால் பரோலின் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் நடைபெற்று வரும் போரின் அண்மைய நிலை குறித்து கருத்து தெரிவித்த கர்தினால் பரோலின் அவர்கள், "அமைதிக்கான வாய்ப்புகள் தென்படாத நிலையில், மோதல்கள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன" என்று கவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் உக்ரைனுக்குச் சென்று திரும்பிய பன்னாட்டு உறவுகளுக்கான திருப்பீடத் துறையின் செயலர் பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் அவர்களின் தகவலின்படி, கடந்த ஞாயிறிலிருந்து திங்கட்கிழமை இரவுக்கு இடையில் மிகவும் கடுமையான தாக்குதல் ஒன்று நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார். ஈரானுடன் மீண்டும் உரையாடல் அவசியம் ஈரான் தொடர்பாகப் பேசிய கர்தினால் பரோலின் அவர்கள், முன்பு இருந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் இல்லை என்றும், அந்நாட்டின் நிலைமை குறித்து கவலை தெரிவித்தார். "இந்த நிலைமை எவ்வாறு முடிவடையும் என்பது யாருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், நாட்டின் நலனுக்காகவும், உலகின் நலனுக்காகவும், நீடித்த ஒப்பந்தத்தை எட்டும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். இத்தகைய சூழல்கள் உலக அமைதிக்கே அச்சுறுத்தலாக உள்ளன" என்று அவர் கூறினார்.

"சுவர்களுக்கு இல்லை; பாலங்களுக்கு ஆம்"

காசா பகுதியில் சுவர் அமைப்பது தொடர்பாக வெளியான தகவல்கள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கர்தினால் பரோலின் அவர்கள், "சுவர்களுக்கு இல்லை; பாலங்களுக்கு ஆம்" என்பதே திருப்பீடத்தின் நிலைப்பாடு என்று தெரிவித்தார். இந்தக் கொள்கையே அந்த முயற்சியைக் குறித்த திருப்பீடத்தின் மதிப்பீட்டையும் பிரதிபலிப்பதாக அவர் கூறினார்.

அமைதிக்கான திருஅவையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய கர்தினால் பரோலின் அவர்கள், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் திருத்தந்தையர்கள் ஒவ்வொருவரும் உலக அமைதியை முன்னெடுத்த விதத்தை எடுத்துக்காட்டினார்.

புனிதர் யோவான் XXIII-இன் *Pacem in Terris*, புனிதர் ஆறாம் பவுல் அவர்களின் "இனி போர் வேண்டாம்!" என்ற அழைப்பு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய "துண்டு துண்டாக நடைபெறும் உலகப் போர்" என்ற எச்சரிக்கை, மற்றும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வலியுறுத்திய "போர் மனிதகுலத்திற்கு ஒருபோதும் தகுதியானதல்ல" என்ற கருத்து ஆகியவற்றை மேற்கோள் காட்டிய அவர், திருஅவை தொடர்ந்து "அமைதியின் உயிர்த்தெழுதலை" உலகிற்கு வழங்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

இறுதியாக 2033-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சிறப்பு யூபிலி ஆண்டை முன்னிட்டு கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், உரையாடல், தூதரகம் மற்றும் நல்லிணக்கத்தின் வழியாக உலகின் பிளவுகளைத் தாண்டிச் செல்லவும் இந்தப் பயணம் உதவும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

Suvara Travels Canada Inc.
The consolidator with a difference






- Online Air Booking Engine
- Consolidator Airfares
- Customized Tour Packages
- Group Reservations
- Commission And Incentive programs

Suvara Travels Canada Inc.
3852 Finch Avenue East,
Suite 306
Scarborough, Ontario
M1T 3T9

Tel: 416 - 292 - 9465
416 - 292 - 4924
Toll Free: 1- 800 - 461 - 2378
1- 800 - 771 - 6884

www.suvara.com

# திரித்துவத் திருத்தலத்திற்கும் பெனடிக்டைன் மடங்களுக்கும் பயணம்



கோடைக்கால ஓய்விற்காக காஸ்தல் கந்தோல்ஃபோவில் தங்கியிருந்த திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், ஜூலை 22, புதன்கிழமை காலை, எதிர்பாராத வகையில் வால்லெபியெத்ராவில் அமைந்துள்ள திரித்துவத் திருத்தலத்திற்கும், பின்னர் சுபியாக்கோவில் உள்ள புனித பெனடிக்ட் மற்றும் புனித ஸ்கொலாஸ்திக்கா துறவற மடங்களுக்கும் சென்று இறைவேண்டல் செய்தார் என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் வெளியிட்ட தந்திச் செய்தி தெரிவித்துள்ளது.

மத்திய இத்தாலியின் லாசியோ மற்றும் அப்ரூஸ்ஸோ பகுதிகளின் எல்லையில், மவுண்ட் ஆட்டோரே *(Mount Autore)* மலையின் பாறைகளுக்குள் அமைந்துள்ள திரித்துவத் திருத்தலத்தை முதலில் திருத்தந்தை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாக்கப்பட்டுள்ள திரித்துவ ஆண்டவரின் புனித சுவர் ஓவியத்தின் முன் அமைதியாக இறைவேண்டல் செய்த திருத்தந்தை, பின்னர் அங்கு கூடியிருந்த திருப்பயணிகளையும் துறவறச் சமூகத்தினரையும் சந்தித்து வாழ்த்தினார்.
கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,800 மீட்டர் உயரத்தில், மொந்தி சிம்ப்ரூயினி *(Monti Simbruini)* மலைத்தொடரில் அமைந்துள்ள இத்திருத்தலம், தூய ஆவியானவர் திருவிழா மற்றும் ஜூலை 26ஆம் நாள் கொண்டாடப்படும் புனித அன்னம்மாள் திருநாளின் போது ஆயிரக்கணக்கான திருப்பயணிகள் கொடிகளுடன் நடைபயணமாக வந்து தரிசிக்கும் புகழ்பெற்ற புனிதத் தலமாகும். திருத்தலத்தின் இயற்கைக் குகையில் காணப்படும் தொன்மையான சுவர் ஓவியங்களில், பைசாந்தியக் கலைப்பாணியில் கிறிஸ்துவின் ஒரே உருவம் மூன்று முறை சித்தரிக்கப்பட்டுள்ள திரித்துவ ஆண்டவரின் ஓவியம் சிறப்புமிக்கதாகக் கருதப்படுகிறது. மேலும், திருத்தலத்தின் படிக்கட்டுகளின் அடிவாரத்தில், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள புனித அன்னம்மாளின் சிற்றாலயமும் திருப்பயணிகளின் பக்தியை ஈர்த்து வருகிறது.

புனித பெனடிக்ட் துறவற மடத்தில் செபம் வால்லெபியெத்ரா திருத்தலப் பயணத்திற்குப் பிறகு திருத்தந்தை அவர்கள், சுபியாக்கோ நகருக்குச் சென்று புனித பெனடிக்ட் துறவற மடத்தை பார்வையிட்டார்.
அங்கு 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித பிரான்சிஸின் சுவரோவியத்தின் முன் சில நிமிடங்கள் அமைதியாக தியானத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து, புனித பெனடிக்ட் வாழ்ந்ததாகக் கருதப்படும் புனிதக் குகையில், மரபுப்படி அவரது திருவுருவச் சிலையின் முழங்காலில் முத்தமிட்டு மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு கூடியிருந்தவர்களுடன் சேர்ந்து விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபத்தை செபித்தார்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக, இந்த மடமும் புனிதக் குகையும் பெனடிக்டைன் ஆன்மீகத்தின் மிக முக்கிய மையங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டு வருகின்றன. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பாலைவனத் துறவியரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு புனித பெனடிக்ட் இக்குகையில் தனிமை வாழ்வு மேற்கொண்டார். அக்காலத்தில் அவர் வளர்த்த ஆன்மீக அனுபவமும் இறையழைப்பும், பின்னர் முதல் துறவறச் சமூகங்களை நிறுவுவதற்கும், மேற்கு உலகின் துறவற வாழ்வின் அடித்தளத்தை அமைப்பதற்கும் வழிவகுத்தன.






கனகத்தூதன்
CanaCaThuthan

# ஒன்றிணைந்த திருஅவை:
# சொல்லல்ல, செயலே முக்கியம்! - கர்தினால் மரியோ கிரெச்



ஒன்றிணைந்த பயணம் (*synodality*) என்பது வெறுமனே விவாதிக்கப்படுவதாக மட்டும் இல்லாமல், உள்ளூர் திருஅவைகளின் அன்றாட வாழ்க்கையில் வாழ்ந்து காட்டப்பட வேண்டும் என்று ஆயர்கள் மாமன்றத்தின் (*Synod of Bishops*) பொதுச் செயலாளரான கர்தினால் மரியோ கிரெச் அவர்கள் கூறியுள்ளார். ஜகார்த்தாவில் இடம்பெற்ற ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் (*FABC*) 12வது நிறைவிறுதிப் பேரவையில் பங்கேற்றவர்களிடம் உரையாற்றிய போது கர்தினால் கிரெச் அவர்கள் "ஒன்றிணைந்த மனமாற்றத்திற்கான அழைப்பு மற்றும் ஆசியாவில் பாலங்களாகவும் பாலங்களை உருவாக்குபவர்களாகவும் இருப்பதற்கான பணி" என்ற கருப்பொருளில் பேசிய அவர், ஒன்றிணைந்த திருஅவையின் (*Synodal Church*) பயணத்தை வாழ்வில் செயல்படுத்துவதற்கான அடிப்படை இடமாக உள்ளூர் திருஅவையே திகழ்கிறது என்று வலியுறுத்தியுள்ளார். இது வெறுமனே ஒரு நிர்வாகப் பிரிவு மட்டுமல்ல; நற்செய்தி அறிவிக்கப்படும், அருள்சாதனங்கள் கொண்டாடப்படும், மற்றும் கிறிஸ்துவுடனான ஒன்றிப்பில் நம்பிக்கையாளர்கள் கூடிவரும் உலகளாவிய திருஅவையின் உண்மையான வெளிப்பாடாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

"மேலும், ஒவ்வொரு உள்ளூர் திருஅவையும் தனது தனித்துவமான கொடைகள், அனுபவங்கள் மற்றும் விசுவாசச் சாட்சியங்களைப் பகிர்வதன் மூலம் உலகளாவிய திருஅவையின் வாழ்வையும் பணியையும் வளப்படுத்துகிறது என்றும் கர்தினால் கிரெச் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

2021-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒன்றிணைந்த பயணம் இறைமக்களுக்குச் செவிமடுப்பதை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டது என்றும், பங்களிப்பை ஒரு வழிமுறையாகவும் இலக்காகவும் கொண்டுள்ளது என்றும் எடுத்துக்காட்டிய கர்தினால் கிரெச் அவர்கள், இந்தச் செயல்முறை, உள்ளூர் சமூகங்களுக்கும் உலகளாவிய திருஅவைக்கும் இடையிலான தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவித்ததுடன், அடித்தட்டு மக்களின் குரல்கள் மாமன்றத்தின் விவேகத்தை வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றியது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். பல்சமய உரையாடல், கலாச்சாரப் பன்முகத்தன்மை, சிறுபான்மை கிறிஸ்தவச் சமூகங்கள் மற்றும் ஏழைகளுக்கான சேவை ஆகியவற்றில் ஆசியத் திருஅவை கொண்டுள்ள அனுபவங்களை உலகளாவிய திருஅவைக்கான மதிப்புமிக்க கொடைகள் என்று சுட்டிக்காட்டிய கர்தினால் கிரெச் அவர்கள், மேலும் இந்தத் திருஅவையை செவிமடுத்தல், பகுத்தறிதல் மற்றும் ஒன்றிப்பைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் ஆயர்கள் வழிநடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

---

# அன்னைமரியா ஓர்...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

போனேன் என்ற விரக்தியோடு இத்திருத்தலம் வரும் மக்கள் சுமை இறங்கிய உணர்வோடு வீடு திரும்புகின்றனர்.

1658ஆம் ஆண்டு முதல் 1686ஆம் ஆண்டு வரை டச்சுக்காரரின் கொடுங்கோல் ஆட்சியினால் இலங்கையில் அருள்பணியாளர்கள் ஒருவரும் இல்லை. அக்காலத்தில் விசுவாசமுள்ள பொதுநிலையினரே கிறிஸ்தவத்தை வளர்த்து வந்தனர். பின்பு, 17ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில்(1687) இந்தியாவின் கோவாவிலிருந்து *Oratorian* சபையைச் சேர்ந்த அருளாளர் ஜோசப் வாஸ் போன்ற மறைப்பணியாளர்கள் கத்தோலிக்க விசுவாசத்துக்கு மீண்டும் உயிர்கொடுத்து இந்தச் சிறிய மடு அன்னை ஆலயத்தை விரிவுபடுத்தினர். இலங்கை முழுவதிலுமிருந்து பக்தர்கள் வரத் தொடங்கினர். அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த கொழும்புவின் முதல் பேராயர் *Christophe Earnest Bonjean* என்பவரால் புதிய மடு அன்னை ஆலயம் கட்டும் பணி 1872ல் துவக்கப்பட்டு பெருமளவில் ஊக்கம் வழங்கப்பட்டது. மடு அன்னைமீது சிறப்பு பக்தி கொண்டிருந்த அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த யாழ்ப்பாண ஆயர் *Jules-Andr Brault* என்பவர் 1920ஆம் ஆண்டில் திருத்தந்தையிடம் சிறப்பு அனுமதி கேட்டு எழுதினார். 1921ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி திருத்தந்தை 15ஆம் பெனடிக்ட் அவர்கள் அனுமதி வழங்க, 1924ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் தேதி மடுமாதா திரு உருவத்துக்கு திருத்தந்தை 11ஆம் பயஸின் காலத்தில் ஆடம்பரமாக முடி சூட்டப்பட்டது. மரத்தாலான இத்திருத்தலம், நீலம் மற்றும் வெள்ளைப் பளிங்குக் கற்களால் மாற்றி அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது 1944ஆம் ஆண்டில் எவ்வளவோ கட்டுப்பாடுகள், போக்குவரத்துச் சிரமங்கள் இருந்தும், காட்டிலிருக்கும் இந்த மடு அன்னை திருத்தலத்துக்கு 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்து ஆலய அருள்பொழிவில் கலந்துகொண்டனர். இலங்கையில் சண்டை முடிவதற்காக மக்களைச் செபிக்கத் தூண்டும் நோக்கத்தில் 1948, 1974, 2001 ஆகிய ஆண்டுகளில் அந்நாடு முழுவதும் மடு அன்னை திருவுருவம் எடுத்துச் செல்லப்பட்டது. அமைதியை வேண்டி அணையாத் தீபம் ஒன்று மன்னார் மேனாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்களால் மடு அன்னையின் உள்பீடத்தில் 2003ஆம் ஆண்டு ஏற்றி வைக்கப்பட்டது.

திருத்தலத்தின் புனிதத்தைப் பேணுவதற்காக மதுபானம், புகைப்பிடித்தல், போதைப்பொருள், துர்நடத்தையில் ஈடுபடுதல், கேளிக்கைகள், களியாட்டங்கள் ஆகியவை முழுவதும் தடை செய்யப்பட்டு, மடுத்திருத்தலம் உணவு, உடை, உறையுள், பக்தி, பரவசம் போன்றவற்றிற்கு மாத்திரம் உட்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிற கிராமங்களில் உள்ளவர்கள் நேர்த்திக்கடனுக்காக இரண்டு, மூன்று நாட்கள் கால் நடையாக நடந்து, கூட்டம் கூட்டமாக ஆவே ஆவே மரியா வாழ்க



வாழ்க மரியே மருதமடு மாதாவே என்னும் பாடல்களைப் பாடிக்கொண்டு மடுத்திருப்பதியை வந்து அடைவதை எப்போதும் காணலாம்.

# கருணைக்கொலைக்கு பதிலாக நேர்மறையான மாற்று வலியுறுத்தப்படும் வழிகள்



மருத்துவர்களின் உதவியுடன் சட்டப்பூர்வமாகத் தங்களின் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் *(Voluntary Assisted Dying - VAD)* முறையை விரிவுபடுத்துவதை நோக்கி ஆஸ்திரேலியா நகரும் நிலையில், கருணைக்கொலைக்கு பதிலாக இரக்கத்துடன் கூடிய மாற்று வழிகளை ஊக்குவிக்குமாறு கத்தோலிக்க திருஅவைக்கு சிட்னி பேராயர் அந்தோணி ஃபிஷர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலிய தொழிற்கட்சி கருணைக்கொலை ஒப்புதல்களுக்கான இணையவழி ஆலோசனைகளுக்கு மத்திய அரசின் தடைகளை அகற்றுவதற்கும், எதிர்காலத்தில் இந்த தன்னார்வ மரண சட்டத்தின் மீது சட்டமியற்றுபவர்கள் மனச்சான்றின்படி வாக்களிக்க அனுமதிப்பதற்கும் வாக்களித்து ஆதரவளித்ததைத் தொடர்ந்து அவர் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார். இந்த முன்மொழிவு இன்னும் சட்டமாக மாறவில்லை என்றாலும், கருணைக்கொலையை எளிதாக அணுகுவதற்கான மற்றொரு படியை இது குறிக்கிறது என்று பேராயர் ஃபிஷர் எச்சரித்துள்ளார். இந்த முன்மொழிவை அவர் தொலைதூர மருத்துவம் என்பதற்கு பதிலாக தொலைதூர மரணம் என்று விவரித்தார்.

இணையவழி ஆலோசனைகள் மூலம் விரிவான மருத்துவ மதிப்பீடுகள், வலி நிவாரண சிகிச்சை பற்றிய உரையாடல் மற்றும் மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையேயான நேரடி தனிப்பட்ட உறவுகள் ஆகியவை தவிர்க்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியா தனது முதல் தன்னார்வ மரண சட்டத்தை 2017 ஆம் ஆண்டில் விக்டோரியாவில் சட்டபூர்வமாக்கியது. அதன்பிறகு இது ஒவ்வொரு மாநிலத்திற்கும் மற்றும் எல்லைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது, மேலும் வடக்குப்பகுதியும் *(Northern Territory)* விரைவில் இதை சட்டபூர்வமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மருத்துவர்களின் உதவியுடன் சட்டப்பூர்வமாகத் தங்களின் வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 14,000-க்கும் மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும், 7,000-க்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தின் மூலம் இறந்துள்ளதாகவும் பேராயர் ஃபிஷர் சுட்டிக்காட்டினார்.

கருணைக்கொலை என்பது மனித மாண்பிற்கு எதிரானது என்ற கத்தோலிக்கத் திருஅவையின் போதனையை மீண்டும் உறுதிப்படுத்திய அவர், நோயாளிகள், முதியவர்கள் மற்றும் இறக்கும் தருவாயில் இருப்பவர்களுக்கு திருஅவையானது சிறந்த வலி நிவாரண சிகிச்சை, ஆன்மீக மற்றும் மேய்ப்புப் பணி ஆதரவு மற்றும் இரக்கத்துடன் கூடிய துணையை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கருவுருதல் முதல் இயற்கையான மரணம் வரை ஒவ்வொரு மனித உயிரின் மாண்பையும் தொடர்ந்து நிலைநிறுத்தும் அதே வேளையில், கத்தோலிக்க மருத்துவமனைகள், முதியோர் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் நலவாழ்வு வல்லுநர்கள் கருணைக்கொலையில் பங்கேற்பதில் இருந்து விலகிக்கொள்ள அனுமதிக்கும் வலுவான சட்டப் பாதுகாப்புகளுக்கும் பேராயர் அழைப்பு விடுத்துள்ளார்.


# ‘பாபேல் கோபுரத்தை அல்ல, ஒன்றிப்பை உருவாக்குங்கள்’ என திருத்தந்தை ஆசிய ஆயர்களுக்கு அழைப்பு:

ஆசியாவில் உள்ள திருஅவை "பாபேல் கோபுரத்தைக் கட்டும் கட்டிடக்கலைஞர்களாக இல்லாமல், ஒன்றிப்பை உருவாக்குபவர்களாக" உருவாக வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இறைவனைத் தங்கள் வாழ்வின் மையமாகவும், சக மனிதரைத் தங்கள் ஒவ்வொரு முடிவின் மையமாகவும் வைத்துச் செயல்படுமாறு நம்பிக்கையாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மும்பை உயர் மறைமாவட்டத்தின் ஓய்வுபெற்ற பேராயர் கர்தினால் ஆஸ்வால்ட் கிரேசியஸ் அவர்களை, இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் ஜூலை 20 முதல் 26 வரை நடைபெறவுள்ள ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்






அருள்முனைவர்
சேவியர் அந்தோனி சே.ச.

### சேவலைக் கண்டதும் அது பயந்த நரி:

முன்னொரு காலத்தில், ஒரு நரி முதன்முறையாக ஒரு சேவலைப் பார்த்தது. சேவலைக் கண்டதும் அது பயந்து போனது. "அய்யய்யோ! தலையில் நெருப்பைக் கட்டிக்கொண்டு ஒரு கொடிய விலங்கு உலா வருகிறதே! தொண்டையைக் கிழித்துக் கதறுகிறதே! அதோடு பறக்கவும் செய்கிறதே!" என்று எண்ணியது. அதன்பிறகு, சேவலைப் பார்த்த போதெல்லாம் நரி பயந்து நடுங்கி, ஓடி ஓடி ஒளிந்துகொண்டது. இதைக் கவனித்த சேவல், நட்புணர்வோடு நரியிடம் கேட்டது:"நண்பா! என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஏன் இப்படி ஓடி ஒளிகிறாய்? பயப்படாதே... பக்கத்தில் வா." ஆனால், தூரத்திலிருந்தபடியே நடுங்கிக் கொண்டிருந்த நரி, "நோ... நோ... நோ... சான்ஸே இல்லை! தலையில் நெருப்பைக் கட்டிக்கொண்டு அலைபவன் நீ. உன் அருகில் வந்தால் என்னையும் பற்றவைத்து விடுவாய்!" என்றது. அதற்கு சேவல் அமைதியாக, "நண்பா! அது நெருப்பு அல்ல. என் சிவந்த கொண்டைதான். அருகே வா. தொட்டுப் பார். பயப்படாதே... அது உன்னைச் சுடாது." என்றது. சிறிது தயக்கத்துடன் நரி அருகில் வந்தது. அந்தச் சிவந்த கொண்டையைத் தொட்டுப் பார்த்தது. கோதிப் பார்த்தது. உண்மையை உணர்ந்தது. "ஆமாம்... இது நெருப்பில்லை. வெறும் சிவப்பு நிறச் சதைதான்!" என்று புரிந்துகொண்டது. அடுத்த கணமே, நரி சேவலின் கழுத்தைக் கவ்வியது. சிறகடித்தபடி உயிருடன் போராடிய சேவலால் தப்பிக்க முடியவில்லை. மரண வேதனையில் அது வருந்தியபடி கூறியதாகச் சொல்கிறார்கள்: "ஐயோ! என்னுடைய பலத்தையே நானே பலவீனமாக்கிவிட்டேனே!"

#### சிந்தனை

ஆழம் தெரிந்து காலை விடு; அகலம் தெரிந்து ஆணையிடு.

துரோகத்தை மறந்துவிடலாம்; ஆனால் நம்பிக்கைத் துரோகம் ஆறாத காயத்தை ஏற்படுத்தும்.

உன் பலவீனத்தை நண்பரிடம் சொல்; உன் பலத்தை எதிரியிடம் சொல்; இரண்டையும் இறைவனிடம் சொல்.

காலம் கடந்தாலும் எதிரியை மன்னிக்கலாம்; ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்பவனை மீண்டும் நம்புவதில் எச்சரிக்கையாக இரு.

### திருட்டு வழக்குக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு:

தலைசிறந்த ஞானியொருவர் நடைமுறை வாழ்க்கையின் எதார்த்தங்களை நன்கு அறிந்தவராக இருந்தார். நீதிக்காக உறுதியாகக் குரல் கொடுப்பவரும், உண்மையை உலகிற்கு எடுத்துரைப்பவரும், பொய்மைக்கு ஒருபோதும் இடமளிக்காதவரும் ஆவார். அவரது நேர்மையைப் பற்றி கேள்விப்பட்ட சீன அரசன், அவரை அரண்மனைக்கு அழைத்து முக்கிய அமைச்சராக நியமித்தான். அமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே ஒரு வழக்கு அவரது முன் வந்தது. அந்த நகரின் பெரும் பணக்காரரின் வீட்டில் இருந்து ஒரு ஏழை அரிசி திருடியிருந்தான். இதுவே வழக்கு. ஞானி வழக்கை முழுமையாக விசாரித்து, இரு தரப்பினரின் வாதங்களையும் கவனமாகக் கேட்டார். மேலும் ஆராய்வதற்காக ஒரு வாரம் கழித்து வருமாறு கூறினார்.

ஒரு வாரம் கழித்து தீர்ப்பை அறிவித்தார். திருடிய ஏழைக்கு ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை. ஆனால், அந்தப் பணக்காரருக்கு பத்து மாதங்கள் சிறைத் தண்டனை, என்றார். இதைக் கேட்ட பணக்காரன் அதிர்ச்சியடைந்து, நான் என்ன தவறு செய்தேன்? என்று கேட்டான். அதற்கு ஞானி, இந்த நகரத்தின் பெரும்பாலான செல்வத்தை நீயே குவித்து வைத்திருக்கிறாய். உழைப்பின் வலி உனக்குத் தெரியாது. உன் அளவுக்கு மீறிய செல்வச் சேர்க்கையே இந்த ஏழையைத் திருடனாக மாற்றியுள்ளது. ஒரு ஏழையைத் திருடனாக்கியதற்கான பொறுப்பு உனக்கும் உண்டு, என்றார். இந்தக் கதை நமக்கு ஒரு முக்கியமான உண்மையை உணர்த்துகிறது: அளவுக்கு மீறிய செல்வக் குவிப்பு சமூக அநீதியை உருவாக்குகிறது. சொத்துக்களை மட்டும் நாடாமல், பொதுநலனுக்காக வாழ்பவரே உண்மையில் மக்களின் சொத்தாக மாறுகிறார்.

## பாபேல் கோபுரத்தை...

19ஆம் பக்கத் தொடர்ச்சி

*(FABC)* 12வது நிறைவிறுதிப் பேரவைக்கு தனது சிறப்புத் தூதராக நியமித்து எழுதியுள்ள கடிதத்தில், திருத்தந்தை அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அக்கடிதத்தில், தமது மகத்தான மானுடம் *(Magnifica Humanitas*, எண் 16) என்ற திருத்தூது மடலை மேற்கோள்காட்டிய திருத்தந்தை அவர்கள், இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்வதில் "தங்கள் கைகளில் கறை படியும்" என்ற அச்சமின்றி, ஆயர்களும் நம்பிக்கையாளர்களும் துணிவுடன் செயல்பட வேண்டும் என்று ஊக்குவித்துள்ளார்.
"அத்துடன் ஆசியாவில் உள்ள திருஅவை நம்பிக்கையிலும் மனிதநேயத்திலும் தொடர்ந்து செழித்தோங்கும்" என்ற தனது நம்பிக்கையையும் அக்கடிதத்தில் திருத்தந்தை வெளிப்படுத்தியுள்ளார்.
மகத்தான மானுடம் *(Magnifica Humanitas)* என்ற தனது திருத்தூது மடலில் வலியுறுத்திய கருத்துகளை மீண்டும் நினைவுபடுத்திய திருத்தந்தை அவர்கள், ஏழைகள், நோயாளிகள், புலம்பெயர்ந்தோர் மற்றும் எளியோரே புதுப்பிக்கப்பட்ட சமூகத்தின் "மூலைக்கல்" என எடுத்துரைத்தார்.

திருப்பாடல் 85-ஐ மேற்கோள்காட்டிய திருத்தந்தை, "வலுவான மற்றும் அனைவரையும் வரவேற்கக்கூடிய ஒரு பொதுவான இல்லத்தைக் கட்டுவதற்கு அன்பும் உண்மையும், நீதியும் அமைதியும் ஒன்றாக இணைய வேண்டும்" என்றார்.

மேலும், "மற்றொரு பாபேல் கோபுரத்தை" கட்டுவதைக் கைவிட்டு, மனிதகுலம் இறைவனின் பிரசன்னத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரும் பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுமாறு வேண்டுகோள் விடுத்தார்.
இறுதியாக, இந்த ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் நிறைவிறுதிப் பேரவைக் கூட்டத்தையும் கர்தினால் கிரேசியஸ் அவர்களையும் தூய கன்னி மரியா மற்றும் புனித யோசேப்பின் பாதுகாப்பில் ஒப்படைத்து தனது செய்தியை திருத்தந்தை நிறைவு செய்தார்.




அன்பிற்கினியவர்களே! இன்றைய சிந்தனையில் உங்களை விண்வெளிக்கே அழைத்துச் செல்ல விரும்புகிறேன். 1969ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் தேதி, மனித வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு நடந்தது. விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதன்முறையாக கால்பதித்தார். மனிதகுலத்தின் வரலாற்றில் அது ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கிய நாள். பின்னர், அவர் பூமிக்குத் திரும்பி வந்தபோது, ஒருவர் அவரிடம் ஒரு கேள்வி கேட்டார்:

"நிலவில் முதல் அடியை எடுத்து வைத்தபோது உங்களுக்கு எப்படி இருந்தது?"

அதற்கு நீல் ஆம்ஸ்ட்ராங் அளித்த பதில் மிகவும் சிந்திக்க வைக்கிறது. அவர் கூறினார்:

"ஒரு மனிதனாக நான் ஒரு சாதாரண அடியை எடுத்து வைத்தேன். ஆனால் மனிதகுலத்திற்கு அது ஒரு மாபெரும் முன்னேற்றமாக இருந்தது."

உண்மையில், அவருக்கு அது ஒரு சாதாரண நடைபோலத் தோன்றியிருக்கலாம். ஆனால் உலக வரலாற்றைப் பொறுத்தவரை, மனிதன் முதன்முறையாக நிலவில் கால்பதித்த அந்தத் தருணம், இதுவரை இல்லாத ஒரு சாதனையைப் படைத்த வரலாற்று நிகழ்வாக மாறியது.


அன்பானவர்களே, நமது வாழ்க்கையிலும் இதே உண்மை பொருந்துகிறது.

நாம் செய்யும் பல செயல்கள் நமக்குச் சாதாரணமாகத் தோன்றலாம். "இதில் என்ன பெரிய விஷயம்?" என்று கூட நாம் நினைக்கலாம். ஆனால் அதே செயல், மற்றொருவரின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். அது அவருக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும், புதிய தொடக்கத்தையும் தரக்கூடும். எனவே, சிறிய செயல்களை ஒருபோதும் அலட்சியப்படுத்தாதீர்கள். ஒரு புன்னகை, ஒரு ஆறுதல் வார்த்தை, ஒரு சிறிய உதவி, ஒரு ஊக்கமளிக்கும் செயல்—இவை அனைத்தும் மற்றவர்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் வைத்த அந்த ஒரு அடி, அவருக்குச் சாதாரணமாக இருந்தாலும், மனிதகுலத்திற்கு வரலாற்றை மாற்றிய ஒரு மாபெரும் அடியாக அமைந்தது. அதுபோல, நம் வாழ்விலும் நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல செயலையும் அன்போடும், பொறுப்போடும், அர்ப்பணிப்போடும் செய்வோம். ஏனெனில், இன்று நாம் சிறியதாக நினைக்கும் செயல், நாளை யாரோ ஒருவரின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கக்கூடும்.

ஆண்டவர் நம்மை அத்தகைய நன்மை செய்யும் கருவிகளாக மாற்றுவாராக!






உடலையும் மனதையும் ஒன்றிணைப்போம்; உலகிற்கு அமைதியை விதைப்போம்! "

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 21-ஆம் தேதி சர்வதேச யோகா தினம் (International Yoga Day) உலகம் முழுவதும் மிகுந்த உற்சாகத்துடன் கடைப்பிடிக்கப்படுகிறது. யோகா என்பது வெறும் உடற்பயிற்சி மட்டுமல்ல; அது உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருமுகப்படுத்தும் ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். மன அழுத்தமும் உடல்நலக் குறைபாடுகளும் பெருகிவரும் இன்றைய இயந்திரத்தனமான உலகில், மனித குலம் அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ யோகா ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது.

சர்வதேச யோகா தினத்தின் பின்னணியில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. 2014-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் (United Nations), இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் யோகா தினத்திற்கான முன்மொழிவை வழங்கினார். இதனை ஏற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபை, ஜூன் 21-ஆம் தேதியைச் சர்வதேச யோகா தினமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதன் விளைவாக, 2015-ஆம் ஆண்டு ஜூன் 21 முதல் உலகம் முழுவதும் உள்ள நாடுகள் யோகா தினத்தைக் கொண்டாடி வருகின்றன.

"யோகா" என்ற சொல் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானது, இதற்கு "இணைத்தல்" அல்லது "ஒன்றிணைத்தல்" என்று பொருள். இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் தோன்றிய ஒரு பழமையான கலை மற்றும் அறிவியல் ஆகும். ஆசனங்கள், பிராணாயாமம் (சுவாசப் பயிற்சி) மற்றும் தியானம் ஆகியவற்றின் மூலம் ஒரு மனிதன் தனது உடலின் ஆற்றலை மேம்படுத்தி, மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். இது ஒரு மதச் சார்பற்ற பயிற்சி என்பதால் உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களும் இதனைத் தடையின்றிப் பின்பற்றி வருகின்றனர்.

யோகா பயிற்சியை ஒரு வாழ்க்கை முறையாக மாற்றிக்கொள்வதன் மூலம் இதய நோய், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளில் இருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். குறிப்பாக, இன்றைய தலைமுறைக்குத் தேவையான மன ஒருமைப்பாட்டையும், நேர்மறை எண்ணங்களையும் வளர்ப்பதில் யோகா முக்கியப் பங்கு வகிக்கிறது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கேற்ப, தினமும் யோகா பயிற்சி செய்து ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் உறுதி ஏற்போம்.

யோகா என்பது உடற்பயிற்சிகளையும் தாண்டிய ஒரு உன்னதக் கலை. இன்றைய இயந்திரத்தனமான உலகில் மனிதர்கள் சந்திக்கும் மிக முக்கியமான சவாலான மன அழுத்தத்தைக் குறைக்க யோகா ஒரு சிறந்த மருந்தாக அமைகிறது. முறையான யோகா பயிற்சியானது மனதிற்கு அமைதியையும், தெளிவையும் வழங்குவதோடு, ஒரு செயலில் முழுமையாக ஈடுபடுவதற்கான கவனத்தையும் (Concentration) அதிகரிக்கிறது. எதிர்மறை எண்ணங்களை அகற்றி, ஒருவரை எப்போதும் நேர்மறையான மனநிலையில் வைத்திருக்க யோகா உதவுகிறது.

உடல் ரீதியாகப் பார்க்கும்போது, யோகா உடலுக்கு அதீத நெகிழ்ச்சித் தன்மையை (Flexibility) வழங்குகிறது. இது தசைகளை வலுப்படுத்துவதுடன், உடலில் இரத்த ஓட்டம் சீராக நடைபெற உதவுகிறது. தொடர்ச்சியான பயிற்சியின் மூலம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதோடு, இதயம் மற்றும் நுரையீரல் தொடர்பான நோய்கள் வரும் அபாயமும் குறைகிறது. மருந்துகள் இன்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு இயற்கையிலேயே நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் இந்த யோகா கலை.

ஆன்மீக ரீதியாக, யோகா ஒருவரைத் தன்னுணர்வு பெறச் செய்கிறது. ஒரு மனிதன் தனது உள்ளத்தோடு உரையாடவும், ஆழமான உள்ளமைதியை அடையவும் தியானம் மற்றும் மூச்சுப் பயிற்சிகள் வழிவகை செய்கின்றன. உலகியல் ஓட்டத்தில் நாம் தொலைக்கும் சமநிலையை மீட்டெடுத்து, மனதிற்கும் ஆன்மாவிற்கும் இடையே ஒரு பாலமாக யோகா அமைகிறது. இது ஒருவரை முழுமையான மனிதராக மாற்றும் ஒரு ஆன்மீகப் பயணம் என்றால் அது மிகையல்ல.

சர்வதேச யோகா தினம் ஏன் முக்கியத்துவம் பெறுகிறது என்றால், இன்றைய வேகமான வாழ்க்கைச் சூழலில் நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்க மறந்து விடுகிறோம். அதிகரித்துவரும் மன அழுத்தம் மற்றும் உடல்நலச் சிக்கல்களுக்கு இயற்கையான வழியில் தீர்வுகாண இந்த நாள் ஒரு விழிப்புணர்வாக அமைகிறது. இது வெறும் ஒரு நாள் கொண்டாட்டம் மட்டுமல்ல, உலகளாவிய ஆரோக்கிய இயக்கமாக உருவெடுத்துள்ளது.

பொதுவான யோகா பயிற்சிகளில் ஆசனங்கள், பிராணாயாமம் மற்றும் தியானம் ஆகியவை முதன்மையானவை. குறிப்பாக, 12 நிலைகளைக் கொண்ட 'சூரிய நமஸ்காரம்' என்பது உடலின் அனைத்து உறுப்புகளுக்கும் புத்துயிர் அளிக்கும் ஒரு முழுமையான பயிற்சியாகும். மூச்சுப் பயிற்சிகள் நுரையீரலைத் தூய்மைப்படுத்துவதோடு, இரத்தத்தில் ஆக்சிஜன் அளவை அதிகரிக்கச் செய்கின்றன. தியானம் மனதை ஒருநிலைப்படுத்தி ஆழமான அமைதியைத் தருகிறது.

இன்றைய தலைமுறைக்கு யோகா ஒரு தவிர்க்க முடியாத வாழ்க்கை முறையாக மாற வேண்டும். "ஒரு நாள் யோகா செய்வது நல்லது, ஆனால் தினமும் செய்வது வாழ்க்கையையே மாற்றும்" என்பதை இளைஞர்கள் உணர வேண்டும். தினமும் சில நிமிடங்கள் ஒதுக்கி யோகா செய்வதன் மூலம் உடல் பருமன், தூக்கமின்மை மற்றும் சோர்வு போன்ற நவீன காலப் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். இது உங்கள் வாழ்க்கையைச் சமநிலையாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றும்.

யோகா என்பது தனிமனித ஆரோக்கியத்திற்கான கருவி மட்டுமல்ல, அது உலகளாவிய சகோதரத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் ஒரு பாலமாகும். ஜாதி, மத, மொழி மற்றும் தேச எல்லைகளைக் கடந்து கோடிக்கணக்கான மக்கள் ஒரே நாளில் யோகா பயிற்சிகளை மேற்கொள்வது, "வசுதைவ குடும்பகம்" (உலகமே ஒரு குடும்பம்) என்ற தத்துவத்திற்கு உயிரூட்டுகிறது. உலக நாடுகள் ஒன்றிணைந்து ஆரோக்கியமான பூமியை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை இந்தத் தினம் ஒவ்வொரு ஆண்டும் நமக்கு நினைவூட்டுகிறது.

தற்கால டிஜிட்டல் உலகில், மொபைல் மற்றும் கணினித் திரைகளுக்கு முன்னால் அதிக நேரம் செலவிடும் இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் யோகா ஒரு வரப்பிரசாதமாகும். இது தவறான உடல் அமர்வினால் (Posture) ஏற்படும் முதுகுவலி மற்றும் கழுத்துவலி போன்ற பிரச்சினைகளைச் சரிசெய்வதுடன், மூளையின் செயல்திறனைத் தூண்டி நினைவாற்றலைப் பெருக்குகிறது. இளமையிலேயே யோகா பயில்வது, ஒரு கட்டுக்கோப்பான உடல் அமைப்பையும், எதையும் எதிர்கொள்ளும் மனதிடத்தையும் அவர்களுக்கு வழங்குகிறது.


முடிவாக, யோகா என்பது நாம் செய்யும் ஒரு செயல் அல்ல, அது நாம் வாழும் முறையாக மாற வேண்டும். சூரியன் உதிப்பது எவ்வளவு இயற்கையானதோ, அவ்வளவு இயற்கையாக நமது தினசரி அட்டவணையில் யோகா இடம்பெற வேண்டும். இது ஒரு மதச் சடங்கு அல்ல, இது ஒரு அறிவியல் சார்ந்த வாழ்வியல் கலை. நம்மிடம் இருக்கும் விலைமதிப்பற்ற சொத்தான இந்த உடலையும் மனதையும் பேணிக் காப்போம். யோகாவைப் பயில்வோம்; நோயற்ற, கவலையற்ற, வளமான வாழ்வை இப்புவியில் நிலைநாட்ட உறுதி ஏற்போம்!


Chapel Ridge FUNERAL HOME & CRE
SERVING THE
COMMUNITY
OF GREATER TORONTO
Chapel Ridge
FUNERAL HOME INC.
MARKHAM
ST. JOHN'S DIXIE
EMETERY & CREMATORIUM
DUNDAS ST. E.
www.stjohnsdixie.co
MISSISSAUGA
North Toron
CREMATORIU
STOUFFVILLE
8911 WOODBINE AVE
MARKHAM, ON L3R 5G1
737 DUNDAS ST E
MISSISSAUGA, ON L4Y 2B5
2 STALWART INDUSTRIAL DR
GORMLEY, ON L0H 1G0
CALL - 416 258 6759
CHRISTEEN SEEVARATNAM
LICENSED FUNERAL DIRECTOR
(416) 258-6759 | christeenseeva@yahoo.ca | www.chapelridgefh.com
WHEN LOVED ONES DEPART
WE CARRY YOUR BURDEN WITH HELPING HANDS
WE LEAD YOU GENTLY TO YOUR LOVED ONES
FINAL RESTING
We provide a full range of services to families,
who have experienced a loss of a loved one, including:
Visitation
Funeral & Memorial Service
Reception
On-Site Cremation Services Available
PEACE OF MIND HAS NEVER BEEN
SO AFFORDABLE. PLAN AHEAD TODAY
Pre-Arranging: A Wise Choice...
FINANCIAL BENEFITS
Lock in the cost at today's prices
Convenient time payments
Insured against early death
EMOTIONAL BENEFITS
Letting your family know your wishes
Peace of mind to you & your family
Relieve the added stress & burden

# Gain Peace of Mind by Planning Ahead

Give your family peace of mind with a pre-arranged funeral and burial. Take the time you need to make informed decisions, select the products and services that are right for you and pay today's prices, not tomorrow's.

- Competitive pricing & **no HST on select service fees**
- **0% interest financing** & flexible payment terms



CATHOLIC CEMETERIES & FUNERAL SERVICES
ARCHDIOCESE OF TORONTO

catholic-cemeteries.com